தொகுதி: எட்டு

Registered as a Newspaper



O/L 89

பழைய } பாடத்
புதிய } திட்டம்

PAPER CLASS

விஞ்ஞானம்-செல்வவடிவேல்
கணிதம் - இந்திரன்
தமிழ் - பண்டிதர்
சமூகவியல் - வேலா
ஆங்கிலம் - மகாலிங்கம்
வர்த்தகம் - நவம்


# உதயன்


விலை ரூ 2. 50



நிரு
ரியூசன் சென்ரர்
கோண்டாவில்.

89 A/L
PAPER CLASS

Phy — சௌந்தி
Tu - Thu - 4.00
Che — செல்வா
Sat - Sun - 2.30
Bot — பாலா
Sat - Sun - 3.30
Zoo — ஞானம்
Sat - Sun - 8.15



கூர்: 4 சிபவ ஞூ தை மீ 04 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ ஆகிர் பிறை 08 (17-01-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 46


# வெளிநாட்டு உதவியுடன் குடாநாட்டு விவசாயவிருத்தி

## சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் உயர்மட்ட மாநாடு

யாழ்ப்பாணம், ஜனவரி 17

யாழ்ப்பாண மாவட்டத்தின் விவசாய விருத்திக்கான பல திட்டங்களுக்கு, சர்வதேச நிறுவனங்கள் நிதி உதவி வழங்க முன்வந்துள்ளன.

நிதி உதவிகளைத் திட்டமிட்டுப் பயன்படுத்துவது பற்றி ஆராய்ந்து முடிவெடுப்பதற்காக கொழும்பில் அடுத்த வாரம் உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெற இருக்கிறது. அதில் நிதி வழங்கும் ஸ்தாபனங்களின் உயர் அதிகாரிகளும் விவசாய அமைச்சு அதிகாரிகளும் கலந்து கொள்வர்.

உணவு விவசாய ஸ்தாபனம் (FAO) ஆசிய அபிவிருத்தி வங்கி, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயம், அமெரிக்க உதவித் திட்டம் (USAID) ஆகியவை யாழ்ப்பாண மாவட்ட விவசாய விருத்திக்கு உதவ முன்வந்திருக்கின்றன.

உணவு விவசாய ஸ்தாபனத்தின் உதவித் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் ஏழு உரக்களஞ்சியங்களை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு உரக்களஞ்சியத்திலும் சுமார் இருபது தொன் உரத்தை களஞ்சியப்படுத்தி வைக்கமுடியும். அரச காணிகளில் இத்தகைய களஞ்சியங்கள் நிறுவப்படும்.

உரக்களஞ்சியம் ஒவ்வொன்றையும் அமைப்பதற்கு சுமார் ஒன்றே கால் லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவித் திட்டத்தின் கீழ் இராணுவ நடவடிக்கைகளின் போது சேதமடைந்த விவசாயக் கட்டடங்களையும் சிறிய நீர்ப்பாசனக் குளங்களையும், விவசாயப் பாதைகளையும்


(8 ஆம் பக்கம் பார்க்க)


## காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைகள் இரண்டும் சனி முதல் முழு அளவில் இயங்கும்

யாழ்ப்பாணம், ஜன 17

எதிர்வரும் சனிக்கிழமை முதல் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை, லங்கா சிமென்ட் நிறுவனம் ஆகியன முழு அளவில் இயங்கவுள்ளன.

தற்பொழுது இரண்டு தொழிற்சாலைகளுக்கும் மின்சார இணைப்புக் கிடைத்துள்ள போதிலும் சனிக்கிழமைக்குப் பின்பே முழு அளவிலான மின்சாரம் வழங்கப்பட உள்ளது.

வவுனியா ஈரப்பெரியகுளத்துக்குச் சமீபமாக 133 கே. வி மின்கம்பி ஒன்று அறுந்து விழுந்ததன் காரணமாகவே சீமெந்து தொழிற்சாலைகளுக்கு தற்பொழுது குறைந்தளவு மின்சாரம் வழங்கப்பட்டுவருகிறது.

இதேவேளை திருத்த வேலைகளை மேற்கொள்வதற்காக இலங்கை மின்சார சபை ஊழியர் குழு ஒன்று இன்று ஈரப்பெரியகுளம் செல்ல உள்ளது. (ஒ-10)

## பூஸா தடுப்பு முகாம் சிறைச்சாலையாக மாற்றம்

கொழும்பு ஜன 17

பூஸா தடுப்பு முகாம், நிரந்தர சிறைச்சாலையாக மாற்றப்படவிருக்கிறது.

அதன் நிர்வாகம் சிறைச்சாலை ஆணையாளரின் கீழ் கொண்டுவரப்படும்.

இது காலவரை அவசரகாலச்சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் கீழ் கைதானவர்களை விசாரணைக்காக தடுத்து வைக்கவே பூஸா முகாம் பயன்படுத்தப்பட்டு வந்தது.

அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டபின்னர் பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் படிப்படியாக விடுதலை செய்யப்பட்டுவிட்டனர்.

தற்போது இந்த முகாமை சுவீகரித்து அதனைசாதாரண சிறைக்கூடமாக மாற்ற அரசு தீர்மானித்திருக்கிறது.

## சுழிபுரம் பகுதியில் இளைஞரின் சடலம்

சுழிபுரம், ஜன 17

சுழிபுரம் கிழக்கு இராமநாதன் கடைச்சந்திக்கு சமீபமாக நேற்றுக் காலை சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் கிடக்கக் காணப்பட்டது. சடலத்துக்கு அருகில் இரண்டு புதிய சைக்கிள்களும் கிடந்தன.

சடலத்தை அமைதிப் படையினர் எடுத்துச் சென்றனர்.

இதேவேளை ஞாயிறு இரவு இப்பகுதியில் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கும் சத்தம் அடிக்கடி கேட்டதாகக் கூறப்படுகிறது. [ஒ 28]

## அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டபின் விடுதலையானோர் விவரம் கோருகிறார் ஐ. ஜி. பி.

கொழும்பு, ஜன 17

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டபின்னர் விடுதலையான சகலரின் பெயர், மற்றும் விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்கும்படி நாட்டிலுள்ள பொலீஸ் நிலையங்களுக்கு பொலிஸ் மா அதிபர் உத்தரவு அனுப்பியிருக்கிறார்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தோரை விடுவிக்கும் பாதுகாப்பு முகாம்கள் அது பற்றிய விவரங்களை பொலிஸாருக்கு உடனடியாகத் தெரியப்படுத்தவேண்டும் என்றும் பொலீஸ் மா அதிபர் உத்தரவு கூறுகிறது.

இதுவரை 800 இற்கும் அதிகமானோர் விடுவிக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-எ)

## டிக்ஸிற் திரும்பினார்

கொழும்பு, ஜன 17

இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் கொழும்பு திரும்பினார்.

சில தினங்களுக்கு முன்னர் திரு டிக்ஸிற் புதுடில்லி சென்று ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஏற்பட்டுள்ள இலங்கை நிலைமை பற்றி பிரதமர் ராஜீவ்காந்தியிடம் தெரிவித்தார்.

திரு. டிக்ஸிற் விரைவில் ஜனாதிபதி பிரேமதாஸவைச் சந்தித்து இந்திய நிலைப்பாட்டை எடுத்துக் கூறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ-எ)

### சுபநேரம்

17 -1 - 1989
தை - 04
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
11.05 முதல் 12 35வரை
ராகுகாலம்:
03.35 முதல் 05.05 வரை

## பன்னிரண்டு தங்கப் பாளங்கள் சிக்கின

கொழும்பு, ஜன 17

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து 12 தங்கப் பாளங்களை அதிகாரிகள் கைப்பற்றினர்.

சிங்கப்பூரில் இருந்து வந்த 3 தமிழர்கள் இவற்றை வைத்திருந்தனர். அவர்களிடம் இந்தியப் பாஸ்போர்ட்டுக்கள் இருந்தன.

தங்கப் பாளங்களின் பெறுமதி பல லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டது. (ஒ-எ)

## துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன 17

மல்லாகத்துக்கும் துர்க்காபுரத்துக்கும் இடையில் நேற்றுக் காலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தின்போது படையினர் தரப்பில் இருவருக்கு காயம் ஏற்பட்டதாக ஊர்ஜிதமற்ற தகவல் ஒன்று தெரிவித்தது. (ஒ)

## தமிழகத் தேர்தல்: ஒரே பெயரில் பல வேட்பாளர்கள்!

சென்னை, ஜன 17

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் ஒரே பெயரில் பல வேட்பாளர்கள் 50 தொகுதிகளில் போட்டியிடுகின்றனர்.

ஐம்பது வேட்பாளர்கள் போட்டியிடும் ஈரோடு தொகுதியில் தான் இது அதிகமாகக் காணப்படுகிறது.

அங்கு இரண்டு 'ஈஸ்வரமூர்த்தி'கள், இரண்டு 'குணசேகரம்'கள், இரண்டு 'மாணிக்கம்'கள், மூன்று 'முத்துசாமி'கள், நான்கு 'பழனிசாமி'கள் களத்தில் உள்ளனர்.

★ ஏர்க்காடு தொகுதியில் மூன்று 'பழனிசாமி'கள்

★ புதுக்கோட்டைத் தொகுதியில் முன்னை அமைச்சர் ஆர். எம். வீரப்பனுடன், அதே பெயரில் '3 வீரப்பன்'கள்.

★ ஆற்காடுதொகுதியில் 2 'கிருஷ்ணன்'கள்.

★ குடியாத்தம் தொகுதியில் 2 'கோவிந்தசாமி'கள்.

★ புரசைவாக்கம் தொகுதியில் 2 'செல்வராஜ'


(8 ஆம் பக்கம் பார்க்க)


## கின்னஸ் சாதனை புரிந்த நடிகர் பிரேம்நஸீர் மரணம்

சென்னை, ஜன. 17

பிரபல மலையாள, மற்றும் தமிழ் நடிகர் பிரேம் நஸீர் நேற்று அதிகாலை சென்னையில் காலமானார்.

அவருக்கு வயது 61. குடற்புண்ணினால் அவதிப்பட்ட அவர் பின்னர் சுகமடைந்து வந்தார். திடீரென்று விஷக்காய்ச்சல் அவரைத் தாக்கியது.

உலகிலே அதிக திரைப் படங்களில் நடித்துப் புகழ்பெற்றவர். அதனால் அவரின் பெயர் கின்னஸ் புத்தகத்திலும் இடம்பெற்றது. 700 படங்களுக்கு மேல் நடித்த இவர், 'தைபிறந்தால் வழி பிறக்கும்' என்ற படத்தின் மூலம் தான் திரை உலகுக்கு அறிமுகமானார்.

1985இல் இந்திய அரசு இவருக்கு 'பத்மபூஷண்' விருது அளித்துக் கௌரவித்தது.

36 ஆண்டுகளாக இவர் இளம் கதாநாயகனாக திரையுலகில் திகழ்ந்தார். (ஒ-எ)

### முச்சந்தி முரளி



அப்பா...... உவர் பிரேமர் மருந்து குடுக்கப் போருர் போலே...!

## மருந்துகளின் விலை குறையும்

கொழும்பு, ஜன 17

ஆங்கில மருந்துகளின் விலைகளைக் குறைக்கும் சாத்தியம் பற்றி ஆராயும்படி ஜனாதிபதி பிரேமதாஸ, சுகாதார மற்றும் போதனா ஆஸ்பத்திரி அமைச்சுக்களைக் கேட்டுள்ளார். (ஒ-எ)

## வியட்னுமில் வெடி விபத்தில் 43 பேர் பலி!

ஹனேய், ஜன 17

வியட்னுமில் லொறி ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் 43 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

வெடிமருந்துகள் இந்த லொறியில் ஏற்றிச் செல்லப்பட்டதாகவும் சிகரெட் துண்டில் இருந்து பறந்த பொறியினால் வெடிமருந்து தீப்பற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## தயாரித்த குண்டு வெடித்தது

கொழும்பு ஜன 17

கொழும்பு, கொம்பனித்தெருவில் உள்ள வீடு ஒன்றில் குண்டு ஒன்று வெடித்ததில் கணவன், மனைவி, ஒரு குழந்தை உட்பட ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.

குண்டு தயாரிக்கப்பட்டபோதே அது வெடித்ததாக பொலிஸார் தெரிவித்தனர். சோதனையிட்டபோது வீட்டில் இருந்து 4 கைக்குண்டுகளை பொலிஸார் கைப்பற்றினர். (உ-எ)

## பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு சம்பளம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன 17

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது.

இன்னும் சில மாதங்களில் இச்சம்பள அதிகரிப்பு அமுலுக்கு வரும் என்று உயர் கல்வி அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீது அறிவித்தார். (ஒ-எ)

## சம்பள முற்பணக் கடன்: வெளி இட ஆசிரியருக்கும் பிணையாளர் தேவையில்லை

யாழ்ப்பாணம். ஜன. 17

இரண்டு வருடச் சம்பள முற்பணக் கடனைப் பெறுவதற்கு வயதுக்கட்டுப்பாடும், பிணையாளரும் தேவையில்லை என்ற சலுகையை, வடக்கு கிழக்கை நிரந்தர வசிப்பிடமாகக்கொண்டு பிற மாகாணங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களும் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

அரச ஊழியர்கள் சம்பள முற்பணக் கடன் பெறுவதற்கான பிணையாளர் கெடுபிடியையும் வயதுக் கட்டுப்பாட்டை


[8 ஆம் பக்கம் பார்க்க]


## திருமலையில் 31 பேர் பொங்கலன்று விடுதலை

திருகோணமலை ஜன 17

தைப்பொங்கல் தினத்தன்று திருகோணமலையில் இந்திய அமைதிப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 31 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

நகரப் பகுதியைச் சேர்ந்த ஐவரும் மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த 26 பேருமே விடுவிக்கப்பட்டனர்.

கோப்பூர் -பாலத்தடிச் சேனையைச் சேர்ந்த அருள்சோதி புண்ணியவதி (வயது 19) என்ற இளம் பெண்ணும் விடுதலை செய்யப்பட்டவர்களில் ஒருவராவர். இவர் கடந்த வருடம் பெப்ரவரி 13 ஆம் திகதி முதல் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்து இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு. சிறிஸ்கந்தராசாவும் விடுதலை செய்யப்பட்டவர்களில் ஒருவர். (உ-150)

## விசேட பயிற்சியுடன் புதிய கடற்படைப் பிரிவு.

கொழும்பு, ஜன 17

இலங்கைக் கடற்படை, தரையிலும் நீரிலும் சென்று போர்நடத்தக்கூடிய மரையின் விசேட படைப்பிரிவு ஒன்றை அமைக்கத்திட்டமிட்டு வருகிறது.

அமெரிக்கக் கடற்படையில் உள்ள 'மரைன்' பிரிவுபோன்று தரை, கடல் மற்றும் வானிலும் சென்று போரிடக்கூடியதாக இப்புதிய பிரிவு அமையும் என்று இராணுவவட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய பிரிவுக்கு இன்னும் பெயர்வைக்கப்படவில்லை.

பொதுத்தேர்தல் முடிவடைந்தபின்னர், புதிய பிரிவுக்கு ஆட்கள் திரட்டப்பட்டு பயிற்சி அளிக்கப்படும் என்று தெரிகிறது. (உ-எ)

## ஏற்பாடுகள் பூர்த்தியானதும் நிர்வாகம் முழுவதும் மாகாணசபைக்கு!

### அமைச்சர் தேவா தகவல்

கொழும்பு, ஜன 17

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அமைப்புரீதியான ஏற்பாடுகளும் சட்டரீதியான ஏற்பாடுகளும் முடிவடைந்தபின்னர் நிர்வாகம் முழுவதும் மாகாண சபையின் கீழ் கொண்டுவரப்படும்.

— இப்படி உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யு தேவநாயகம் திருகோணமலையில் நேற்றுத் தெரிவித்தார்.

அங்கு கூட்டம் ஒன்றில் பேசுகையில்; மாகாணசபை திறம்பட இயங்க அனைத்து உதவியும் ஒத்துழைப்பும் வழங்கப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம் எச். முஹம்மது பேசுகையில்;

வட - கிழக்கு மாகாணத்தில் பயணிகள் பஸ் போக்குவரத்தை சகஜநிலைக்குக் கொண்டுவர


(8-ஆம் பக்கம் பார்க்க)



இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


## விற்பனைக்கு

பாவித்த தளபாடங்கள் குளிர்சாதனப் பெட்டி Icing set, English Pram, செற்றி, Showcase, கண்ணாடி மேசை, அலுமாரி, கட்டில், Fan, கபேட். மேசை, Try Cycle, English Cutlery Set, மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 343, பருத்தித்துறை வீதி. நல்லூர். (8986)

புதிய Honda, Reconditioned New Model C50, CD 50, MD 90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. No 390, பிரதான வீதி, பஸ்ரியன்சந்தி, கண்டுக்குளி யாழ்ப்பாணம் (8978)

### கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

(Dekalb) இன பிறவுன் பேட்டுக் குஞ்சு பிறவுன் சேவல் குஞ்சு, கறுப்பு (பிலிமத்) புள்ளி சேவல் (Cobb) இன புரொயிலர் குஞ்சு (28-1-89) சனிக்கிழமை விநியோகிக்கப்படும். சொண்டு வெட்டப்பட்டது (மரெக்ஸ்) தடுப்பூசி போடப்பட்டது. முன்கூட்டியே பதிவு செய்க. இல 9, சந்தையா லேன், (குராவத்தை ரோட்டு) சன்ஞகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) [8877]

### தேவை

ஆண் பெண் விற்பனையாளர்களும், விநியோகஸ்தரும், தேநீர் தயாரிப்பாளரும் உடனடியாக பிரபல ஹோட்டல் ஒன்றுக்குத் தேவைப்படுகின்றனர். தொடர்பு:- 226, Bombay Jai Sweets, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். உடன் நேரில் வரவும். (8891)

### உடன் தேவை

வீடியோ படப்பிடிப்பில் அனுபவமுள்ளவர் உடன் தேவை. திறமைக்கேற்ப (மாதச்சம்பளம்) வழங்கப்படும். மிக்சரும் போடக்கூடியவராய் இருந்தால் நல்லது. (சம்பளம்) 1500/- மேல் கொடுக்கப்படும் நேரில் பேசிக்கொள்ளலாம். நிகல் வீடியோ. ஈச்சமோட்டை பீச் ரோட், யாழ்ப்பாணம். [8879]

### சுஜேரா ரவல்ஸ்

சமையல் வேலைகள் பைப்வேலைகள் தெரிந்தவர்கள் சவூதி அரேபியா [Saudi Arabia] வில் தேவையாக இருக்கிறது. 15 1 89க்கு முன்னர் சுஜேரா ரவல்ஸ் இல 21, வேம்படி ரோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். ஹொட்டல் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்தோர் விரும்பப்படுகின்றனர். ஆங்கில அறிவுடையவர்களாயும் இருத்தல் வேண்டும். (C/1325)

## சேவை

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்தவும் நாடுங்கள்! Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி. 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (Shabra-Samy & Co அருகாமையில்) (C/945)

தமிழ், சிங்கள தட்டச்சு வேலைகள் சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக் கொள்ளவும், எலக்ரோனிக் ரைப்பிங் மூலம் வெளிநாட்டுக் கடிதங்கள் BioDataபோன்றமுக்கிய பிரதிகள் கண்ணைக் கவரக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் மூலம் செய்து கொடுக்கப்படும். ''ஷப்ரு'' சேவைப் பிரிவு இல 19, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (C/1271)

### ரோணியோ

தரமான ரோணியோ பிரதிகளை தமிழ் ஆங்கிலம் சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்: ''ஷப்ரு'' சேவைப்பிரிவு இல 19, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (C/1272)

க. குணராசாவின் புவியியல் 1989 (Personal Class) மீட்டல் வகுப்பு 21-சனி. 3 - 4 படவேலை ஆரம்பமாகின்றது. A/L 1990 புதியவகுப்பு சனி 4- 5 ஆரம்பமாகின்றது. 82, பிறவுண் வீதி, நீராவியடி. (8959)



✱ அவுஸ்திரேலியா ✱ அமெரிக்கா செல்ல விரும்புபவர்கள் உடனடியாக எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

அவுஸ்திரேலியா, அமெரிக்கா விசாக்கள் கைவசம் உள்ளன.

ஐரோப்பிய நாடுகளுக்கு விசா எடுத்துச் செல்ல விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

★ நோர்வே
★ சுவிஸ்லாந்து
★ ஹொலண்ட்
★ ஜேர்மனி

போன்ற நாடுகளுக்கு உடனடியாகவும், விரைவாகவும் செல்லலாம்.

திரு. கந்தசாமி கமலக்கண்ணன், எஞ்ஜினியர் பாஸ்போட் நம்பர் G 0429765 எம்மை உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

BAHARAIN விசா வந்துள்ளது.

தாய்வான் செல்ல பாஸ்போர்ட் தந்தவர்கள் உடனடியாகச் சந்திக்கவும்:

**V. T. R. TRAVELS,**
41, 3rd CROSS STREET,
JAFFNA.
(8988)



**I. D. P. M PART - II**

வகுப்புக்கள் ஆரம்பமாகி உள்ளன.

உங்கள் பதிவுகளுக்கு:-

Result Oriented Institute In North

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. Peters Lane,
Hospital Road,
Jaffna. (C/1339)



தேவை

**தாதிகள் / மருத்துவ மாது**

எமது மருத்துவ மனைக்கு பயிற்றப்பட்ட தாதிகளும், மருத்துவ மாதும் தேவை. இருப்பிடவசதியுண்டு.

தொடர்பு:-
Dr. P. சிவபாலன்
சந்நதி வைத்தியசாலை,
அச்சுவேலி.
அல்லது
சந்நதியான் மருத்துவ நிலையம்,
உரும்பிராய்.
(9177)



**கொம்பியூட்டர் பயிற்சி**

**Diploma in Computer Programming and Data Processing - Basic**

6 மாத காலப் பயிற்சி
(சனி, ஞாயிறு வகுப்புகள்)

ஆரம்பம்: 21-01-1989
[சனி காலை 9.00 மணி]

கட்டணம்: ரூபா 2000/-

முக்கிய கவனிப்பு:

மின் விநியோகத்தடை காரணமாகத் தங்கள் கொம்பியூட்டர் செய்முறைப் பயிற்சிகளைத் தொடர முடியாமல் போன எமது பழைய மாணவர்கள் மீண்டும் தங்கள் பயிற்சிகளைத் தொடரும்படி வேண்டப்படுகின்றார்கள்.

AAT (Sri Lanka) STAGE II
[சனி, ஞாயிறு வகுப்புகள்]

ஆரம்பம்: 21-01-1989
(சனி காலை 9. 00 மணி)

**Diploma in Computer Programming**
(Basic)

3 மாத கால
விசேட தீவிர துரிதப்பயிற்சி
சனி, ஞாயிறு வகுப்புகள்

அண்மையில்தான் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. இன்னும் சில தினங்களுக்கு மாத்திரம் இவ்வகுப்புக்களில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

கட்டணம்:- மாதம் ரூபா300/-

CIMA, AAT (Sri Lanka)
STAGE I, IAB
வகுப்புக்களும்
ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

**HARVARD INSTITUTE**
Successors of
**CANTABIA INSTITUTE**
(Sister Organisation of
Oxonia, Colombo)
&
(Pioneers in Computer Education)

NO. 21, MAIN STREET,
JAFFNA.

[2 ஆம் குறுக்குத் தெரு வழியாக வரவேண்டும்]
[C-1337]


## மீண்டும் பழைய இடத்தில் இயங்கும்

அனலைதீவு, ஜன 17

ஊர்காவற்றுறை அரசினர் வைத்திய அதிகாரியின் அரசாங்க குடிமனையில் தற்காலிமாக இயங்கி வந்தஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரியின் காரியாலயம் மீண்டும் காரைநகர் றெட்பானா கட்டடத்துக்கு 18 ஆம் திகதி முதல்இடம்மாற்றம்செய்யப்படுகிறது.

அண்மைக்காலச் சம்பவங்களினால் சேதமடைந்த றெட்பானா கட்டடம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடம் காரைநகர் துறைமுகத்துக்கு அருகாமையில் அமைந்துள்ளது. (இ-18)

## ஆசிரியர் தினம்

யாழ்ப்பாணம், ஜன 17

சாவகச்சேரி வடக்குக் கொத்தணியில் ஆசிரியர் தினம் 21 ஆம் திகதி கொண்டாடப்படும்.

கொத்தணி அதிபர் திரு. க. சி. குகதாசன் தலைமையில் இந்த வைபவம் நடைபெறும்.

1- 1- 87 முதல் 31-12-88 வரையான காலத்தில் ஓய்வு பெற்ற அதிபர்களும ஆசிரியர்களும் இந்த வைபவத்தில கௌரவிக்கப் படுவார்கள்.

விழா முடிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். (க)

## பால் மா

பச்சிலைப்பள்ளி, ஜன 17

பளைப் பிரிவிலுள்ள இந்திராபுரம், செல்வபுரம் ஆகிய பகுதிகளில் சிறுர்களின்போஷாக்குத் திட்டத்தின் கீழ் லக்ஸ்பிறே பால்மா பைக்கட்டுகளை ஹொர்டெகஸ் நிறுவனம் அண்மையில் வழங்கியது. (க-117)

## உடையார்கட்டில் பிரஜாவுரிமை அற்ற 50பேருக்குக் காணி

புதுக்குடியிருப்பு ஜன 17

உடையார்கட்டுக்கிராமத்தில் உள்ள பிரஜா உரிமையற்ற 50 பேருக்கு உற்பத்தி உத்தரவுப் பத்திரம் என்ற அடிப்படையில் அவர்கள் இதுவரை பயிர் செய்து வந்த காணி வழங்கப் பட்டுள்ளது.

இதுபற்றி காணிஉத்தியோகத்தர் திரு. மாசிலாமணி கருத்துத் தெரிவிக்கையில் இதே போன்று விஸ்வமடு, றெட்பானா போன்ற கிராமங்களில் உள்ளவர்களுக்கும் காணிகள் வழங்கப்பட உள்ளன என்றார்.

இக்காணிகளில் நிலையான கட்டடங்களோ நிலையான பயிர்களோ இடம்பெற அவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-126)

## நியமனம்

மேற்கு ஜேர்மன் நிறுவனமொன்றின் ஆதரவில் இலங்கை மெதடிஸ்த திருச்சபை, யாழ் மாவட்ட தென் இந்திய திருச்சபையாழ்மாவட்ட அங்லிக்கன் திருச்சபை ஆகியன இணைந்து நடத்தும் வடக்கு—கிழக்கு மாகாணங்களிலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், முதியோர் பராமரிப்பு நிலையங்கள், பெண்கள் இல்லம், மற்றும் வேலைத்திட்டங்கள் போன்றவற்றைப் பார்வையிடும் அதிகாரியாக பருத்தித்துறை- கட்டைவேலி மெதடிஸ்த சேகரத்தைச் சேர்ந்த திரு ஜே. எஸ். கிறிஸ்ததாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். (க-160)

## வேண்டுகோள்

சாவகச்சேரி ஜன 17

எழுதுமட்டுவாளில் உள்ள கணேசவித்தியாசாலை சி. சி. ரி. எம் பாடசாலை ஆகிய இரண்டு பாடசாலைகளையும் விருத்தி செய்ய உதவும்படி பாடசாலை அபிவிருத்தி சபை பெற்றோருக்கும் நலன் விரும்பிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மூடப்படும் அபாய நிலையை அடைந்துள்ள இப் பாடசாலைகளைப் பேணிக்காக்கப் பெற்றோர்கள் துணைபுரிய வேண்டும் என்று அபிவிருத்திச் சபையின் செயலாளர் தெரிவித்தார். (க-31)

## உடையார்கட்டு பாடசாலைக்கு இடமாற்றம்

புதுக்குடியிருப்பு ஜன 17

புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் இருந்து உப அதிபர் திரு. க. திருச்செல்வராசா. திரு. சி. ஆறுமுகம் ஆகியோர் உடையார்கட்டு பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

திரு. க. திருச்செல்வராசா உடையார் கட்டுப் பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். [இ-126]

வேலணையில்

## சுகாதாரக் கல்விக் கருத்தரங்கு

அனலைதீவு, ஜன 17

ஊர்காவற்றுறை, வேலணை, மண்டைதீவுக் கொத்தணி அதிபர்கள் பிரிவிலுள்ள பாடசாலைகளிலும், அனலைதீவு. எழுவைதீவு பாடசாலைகளிலும் சுகாதாரக் கல்விக்குப் பொறுப்பாகவுள்ள ஆசிரியர்களுக்கு ஓர் சுகாதாரக் கல்விக கருத்தரங்கு நடைபெறும்.

எதிர்வரும் 19ஆம் திகதி காலை 9.00 மணிக்கு வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் மேற்படி கல்லூரி அதிபர் தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெறும்.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி. யாழ். சுகாதாரக் கல்விப் போதனாசிரியர். சுகாதார மேற்பார்வைப் பரிசோதகர், சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநலச் சேவையாளர்கள் மேற்படி பாடசாலைகளிலுள்ள சுகாதாரம் போதிக்கும் ஆசிரியர்கள், கொத்தணி அதிபர்கள், விஞ்ஞானக் கல்வி ஆலோசகர்கள் ஆகியோர்கள் இதில் கலந்துகொள்வார்கள்.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜி கந்தசாமி பாடசாலை மாணவர்களிடையே காணப்படும் சுகாதாரக் குறைபாடுகளும் அவற்றை நிவர்த்தி செய்தலும் பற்றி கருத்துரை வழங்குவார்.

பாடசாலை மாணவர் சுகாதாரப் பழக்க வழக்கங்களும் சமுதாயத்தில் அதன் தாக்கமும் பற்றி யாழ். சுகாதாரக் கல்விப் போதனாசிரியர் திரு. கே. வைத்திஸ்வரன் உரை நிகழ்த்துவார்:

பாடசாலை வைத்திய பரிசோதனையில் ஆசிரியர் பங்கு என்ன என்பது பற்றி ஊர்காவற்றுறை மேற்பார்வைச் சுகாதாரப் பரிசோதகர் கருத்துரை வழங்குவார்:

இறுதியில் சுகாதாரக் கல்வி பற்றிக் கலந்துரையாடி மாணவர்களின் சுகாதாரத்தை மேம்படுத்தும் செயல் திட்டங்கள் வகுக்கப்படும். (இ-18)

## மீனவர் புகார்

சுழிபுரம். ஜன 17

கடந்த 14ஆம் திகதி சுழிபுரம் புளியந்துறையில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் சிலர் காரைநகர் ஸ்ரீலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டனர் என்றும் அவர்களின் மீன் பறிக்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது. (இ-28)

## அனலைதீவில் மாடுகள்தொல்லை

அனலைதீவில் கட்டாக்காலி மாடுகளால் விவசாயிகள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

இம் முறை நெல் விளைச்சல் நன்றாக இருந்தும் மழை குறைந்ததால் விவசாயிகள் பெரும் பணச் செலவில் நீரிறைக்கும் இயந்திரம் மூலம் குளங்களிலும், கிணறுகளிலுமிருந்து நீர் இறைத்து வருகிறார்கள்.

இத்தலைக்கும் மத்தியில் கட்டாக்காலி மாடுகளால் விவசாயிகளுக்கு மேலதிக தொல்லை இருந்து வருகிறது.

கட்டாக்காலி மாடுகளை அவற்றின் உரிமையாளர் கட்டிவைக்கத் தவறும் பட்சத்தில் அவை பிடிக்கப்படுமென விவசாய உத்தியோகஸ்தர் எச்சரிக்கை செய்துள்ளார். (இ-18)


✱ மேற்கு ஜேர்மனி ✱

செல்ல விரும்புகின்றீர்களா?

முழு விபரங்களுக்கு

வயதெல்லை 20 க்கு குறைந்தவர்கள்

மட்டும் உடன் தொடர்பு கொள்ளுங்கள்

**MACK TRAVELS**
PRIVATE LIMITED

8, First Lane,
Pt Pedro Road, JAFFNA.
[C/1338]



வாணி படிப்பகம், வல்வெட்டித்துறை

**சீட்டிழுப்பு முடிவுகள்**

எமது படிப்பகத்தினால் நடத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டுக் குலுக்கலில் பின்வரும் இலக்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கான பரிசில்கள் 19 - 01 - 1989 வியாழனன்று வழங்கப்படும்.


1 - ஆம் பரிசு — 604. 2- ஆம் பரிசு— 731
3 - ஆம் பரிசு — 1280

10 ஆறுதல் பரிசுகள்:-

| | |
|---|---|
| (1) 125 | (6) 1704 |
| (2) 685 | (7) 1708 |
| (3) 724 | (8) 1884 |
| (4) 910 | (9) 1979 |
| (5) 1249 | (10) 1774 |

செயலாளர்
வாணி படிப்பகம்
(9175)


ஓராண்டு நினைவஞ்சலி



நெடுந்தீவு மேற்கு
**ஆறுமுகம் கணபதிப்பிள்ளை**
(தலைமை ஆசிரியர்)

தோற்றம்: 14 - 12 - 1910 மறைவு: 29 - 01 - 1988

திதி: 17. 01 1989

பாசத்துடனும், நேசத்துடனும் எங்களை எல்லாம் வளர்த்து சிறப்பித்த அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உறவினர்கள்.
36, புறாடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(8992)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்-பிரெஞ்சிய நட்புறவுச் சங்கம்
# ALLIANCE FRANCAISE DE JAFFNA
## புதிய ஆண்டிற்கான ஒன்றிணைந்த வேலைத்திட்டங்களின்
# ஆரம்ப வைபவம்

புதிய ஆண்டிற்கான எமது வேலைத்திட்டங்கள் வைபவ ரீதியாக 22-01-89 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்-பிரெஞ்சிய நட்புறவுச் சங்கத்தில் (130, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்) ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிக காரியாலயத்தின் புனரமைப்பு, திட்டமிடல் அதிகாரியும், பிரான்ஸ் நாட்டவரும், எமது சங்க உறுப்பினருமாகிய,

**மாண்புமிகு பேனுட் போயர் (Hon. Benard Boyer - U. N. H. C. R.)**

அவர்களினல் ஆரம்பித்து வைக்கப்படும்.

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக எமது மண்ணில் இயங்கிவரும் ஒரேயொரு மேற்கத்திய நாடுகளின் நட்புறவு பரிமாற்று நிலையமாகிய எமது சங்கம், எமது எதிர்கால சந்ததியினரின் கலை, கலாசார, கல்வி பொருளாதார, இலக்கிய வளர்ச்சிக்கு உதவ வேண்டியது வரலாற்றுத் தேவையாகும். அதனல் இன்றைய அசாதாரண சூழ்நிலையிலும்கூட பல வேலைத்திட்டங்களை இப்புத்தாண்டில் முனைப்புடன் நிறைவேற்ற எமது சங்கம் முன்வந்துள்ளது. மேற்படி திட்டங்கள் எமது சங்கத்தின் பல்வேறு பிரிவுகளினல் நிறைவேற்றப்படவுள்ளன.

பிரெஞ்சு மொழிப் பிரிவு:- **(பொறுப்பாளர் திருமதி S. இராமநாதன்)**

(அ) தற்போது நடாத்தப்பட்டுவரும் பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் குறைந்த கட்டணத்தில் கற்பிக்கப்படவுள்ளன.
(ஆ) யாழ்ப்பாணத்தில் உள்ள முன்னேடிப் பாடசாலைகளில் பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கலை, கலாசார பிரிவு - (I) **(பொறுப்பாளர் U. S. S. அருளானந்தம்)**

இப்பிரிவினல் பல்வேறு நுண்கலை வகுப்புக்கள் பிரசித்திபெற்ற ஆசிரியர் குழுவினல் நடாத்தப்படும். பரத நாட்டியம், சங்கீதம், மிருதங்கம், புல்லாங்குழல், வீணை, வயலின், பண்ணிசை, ஓவியம், யோகக்கலை முதலியனவும் பிறவும்.

கலை, கலாசார பிரிவு - (II) **(பொறுப்பாளர் R. கிருஷ்ணகுமார்)**

(அ) நாடகம், ஓவியக் கண்காட்சிகள், கலாசார நிகழ்ச்சிகள் என்பன இப்பிரிவினல் நடத்தப்படும்.
(ஆ) பிரெஞ்சு நாட்டுத் திரைப்படங்கள், கலாசார திரைப்படங்கள் சிறுவர்களுக்கான திரைப்படங்கள், தொழில் நுட்ப திரைப்படங்கள், வேறு திரைப்படங்கள் கொண்ட வீடியோ நிலையம் ஒன்றும் இப்பிரிவினல் ஆரம்பிக்கப்படும்.

தொழில்கல்வி வளர்ச்சியும் நலன்புரிச் சங்கங்களும்: **(பொறுப்பாளர் ராஜா ராஜதுரை)**

(அ) இப்பிரிவானது சிறுகைத்தொழில் அபிவிருத்திக்கான பல திட்டங்களை அறிவுறுத்தும்,
(ஆ) பல்வேறு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்குடன் தனித் தனியான நலன்புரிச் சங்கங்கள் இப்பிரிவினல் அமைக்கப்படவுள்ளன. இத்திட்டத்தின் கீழ் பின்வரும் நலன்புரிச் சங்கங்கள் நிறுவப்படும்.

(1) நுண்கலைஞர்களுக்கான நலன்புரிச் சங்கம் (2) சிறுகைத்தொழில் உரிமையாளருக்கான நலன்புரிச் சங்கம்.
(3) தொழிற்சாலை / வியாபார ஸ்தாபன ஊழியர்களுக்கான நலன்புரிச் சங்கம். (4) வாகன உரிமையாளர் / தொழிலாளருக்கான நலன்புரிச் சங்கம்.
(5) பிறநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள குடும்பத்தினர் / நெருங்கிய உறவினர்களுக்கான நலன்புரிச் சங்கம்.

இத்திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு இத்துறைகளில் ஈடுபாடு கொண்ட அனைவரும் அவ்வப் பிரிவுகளுக்குரிய பொறுப்பாளருடன் தொடர்பு கொள்வதுடன், இவ்வைபவத்தில் பங்குகொண்டு சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

-நிறைவேற்றுக் குழு
**யாழ் - பிரெஞ்சிய நட்புறவுச் சங்கம்,**
**ALLIANCE FRANCAISE DE JAFFNA,**
130, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(C/1320)


எமது வாழ்த்துக்கள்

ஷப்ரு

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

Our best wishes to Alliance Francaise de Jaffna on the inauguration of it's Social and Cultural Programme on the 22nd January 1989

MACK TRAVELS,
8, Ist Lane, Point Pedro Road,
JAFFNA.
Pioneers in the domestic flight to and from Colombo / Jaffna.

We wish Alliance Francaise de Jaffaa Long life for Greater Caring and Sharing in Language and Culture.
For Greater caring and Sharing in Chinese food in Jaffna
No. 124, YARL CHINESE RESTAURANT,
First Cross Street,
Jaffna.

Our Greetings to Alliance Francaise de Jaffna. on the inauguration of it's Cultural, Social and Economic Programme.
For French Products
Jieto Group,
130, First Cross Street,
Jaffna.

யாழ் பிரெஞ்சிய நற்புறவு ஒன்றியத்தின் அனைத்து வேலைத்திட்டங்களும் வெற்றிபெற இதயம் நிறைந்த
வாழ்த்துக்கள்!
North Ceylon Technical Association
14, St. Peters Lane,
Hospital Road,
Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீழ்ப்படியக் கற்றுக் கொண்டவராலேயே கட்டளைகளையும் பிறப்பிக்க முடியும்

## பரிசளிப்பு விழாவில் சுவாமி சித்ருபானந்தா உரை

யாழ்ப்பாணம், ஜன. 17

'கீழ்ப்படியக் கற்றுக் கொள். அப்பொழுது தான் நீ மற்றவனுக்குக் கட்டளையிட முடியும்' என்ற சுவாமி விவேகானந்தரின் பொன்மொழியை நாம் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்கவேண்டும், இன்று 'நான்' என்ற அகங்காரத்தினால்தான் அனர்த்தங்கள் விளைகின்றன. மாணவர்கள் மத்தியில் தெய்வீக உணர்வை வளர்ப்பதன் மூலமே அவர்களைத் தீயவழியிலிருந்து விலக்கி நல்வழிப்படுத்தலாம்.

'போரூட்' ஸ்தாபனத்தின் ஆதரவில் யாழ் சமத்துவம், சமாதானம், மதுவிலக்குச் சங்கத்தினால் நடத்தப்பட்ட மதுவிலக்கு வியாசப் போட்டியில் பரிசு பெற்றோர்களுக்குப் பரிசுவழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் சுவாமி சித்ருபானந்த மேற்கண்டவாறு கூறினார்.

திருமதி ஜே. ஜோசவ் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

சுவாமிசித்ருபானந்தா தனது உரையில் மேலும் கூறியதாவது:

'இன்று எமது மாணவர்கள் ஏழு எட்டு 'டி'க்களைப் பரீட்சையில்பெறுகிறார்கள்.

ஆனால் முழுமையான கல்விக்கு அணிகலனாக விளங்கும் மூன்று 'டி'க்களை அவர்கள் பெறுவதே நல்வாழ்க்கைக்கு அத்திவாரமாக அமையும்.

அந்த மூன்று 'டி'க்களும் ஆங்கில வரிசையில் ,கடமை, கண்ணியம், கட்டுப்பாடு'கள் ஆகும்.

நாம் ஆணித்தரமான கொள்கையுடன் செயற்பட்டால் அச்சக்தி சுவரையும் உடைக்கும் வலுப்பெற்றது.

சுவாமி விவேகானந்தர் ஆணித்தரமான கொள்கையையும் வலுவடைந்த ஆத்மீக சக்தியையும் பெற்றிருந்தார்.

இதனால்தான் இவர்பால் பெருவாரியான மக்கள் கவரப்பட்டனர்'.

இப்படி அவர் கூறினார்.

'மதுவிலக்கும் திருக்குறளும்' என்னும் பொருள்பற்றி வித்துவான் வேலன் பேசுகையில் கூறியதாவது:

மதுப்பழக்கம் ஆதிகாலம்தொட்டே இருந்து வந்தது,

அன்றைய சமுதாயத்திற்கு ஏற்ப திருவள்ளுவர் 'உண்ணற்க கள்ளை உணில் உண்க சான்றோரான் எண்ணப்பட வேண்டாதார்' எனக் கூறியுள்ளார்:

சான்றோரின் மதிப்பு வேண்டாமென்றால் குடி என்று கூறியுள்ளார்.

இது இன்றைய சமுதாய வளர்ச்சி நிலைக்கும் கள் உண்ணும் பழக்க வேகத்துக்கும் பொருந்தாது.

நாணத்தைத் தமிழ்ச் சமுதாயம் உருவாக்கக் கருதுகிறது

நாணம் பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும் வேண்டற்பாலது. நாணம் போய்விட்டால் மற்றும் மூன்றான அச்சம், மடம், பயிர்ப்பு போய்விடும்.

நாணம்தான் இவைகளைக் கட்டுப்படுத்துவது.

ஒருவரிடம் நாணம் அழிந்துவிட்டால் குடிப்பழக்கம் தானே குடிகொள்ளும்.

ஒரு பாரிய மரத்தை இறுகப் பிடித்துக்கொள்வது அதன் வேர்கள்.

அடிமரம் அல்ல:

ஆனால் அந்த வேர்கள் எங்கள் கண்களுக்குப் புலப்படுவதில்லை,

அதேபோல் தாய்மார்கள் தம்மை வெளிக்காட்டிக்கொள்வதில்லை:

தமது பிள்ளைகளின் குறைபாடுகளை மூடி மறைத்துக் கொள்வார்கள்.

ஆனால் ஒரு தாயைப் பார்த்து, 'உனது மகன் குடிகாரன்' என்றால் அதை அவளால் மூடி மறைக்கவும் முடியாது, சகித்துக்கொள்ளவும் முடியாது.

எனவே நொந்து சுமந்துபெற்ற தாயின் மனதைப்புண்படுத்தலாமா? இப்படி அவர் கேட்டார்.

வியாசப் போட்டியில் பின்வருவோர் முதல் மூன்று பரிசில்களைப் பெற்றிருந்தனர்:

முதலாம் இடம் கனகசபை உமா (பருத்தித்துறை மெதடிஸ்த்)

இரண்டாம் இடம்: எஸ். விஜயகுமாரி (சன்மார்க்க போ. ம. வி.)

மூன்றும் இடம் ரி.புஷ்பகாந்தி (அருணோதயா அளவெட்டி)

இப்பரிசில்களைச் சுவாமி சித்ருபானந்தா வழங்கினார். (ச)

---

### பதினோராம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்:- 12- 09- 1921

மறைவு:- 17- 01- 1978

A. K. ஆறுமுகம்தம்பி
[Station Superintendent,
C. G R. Maradana]


ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்களை அன்புடன் நினைவு கூரும்:

உங்கள் மனைவி கமலா,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்,
மருமக்கள்:

874, நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம். (8961)

---

### ஓராண்டு நினைவஞ்சலி



செல்வி துரைஐயா - சிவரமணி

அன்னையின் மடியில்:- 19- 02- 1970
மண்ணின் மடியில்:- 29- 01- 1988

திதி:- 17-01- 1989

வெண்புறா சிறகொடிந்து விண்சென்று ஓராண்டோ?
விடியலை காணவில்லை வேதனைதான் மறையவில்லை
சீருடன் வாழ்வாயென்று சிந்தித்து நின்றவேளை
நீ எம்மைப் பிரியுமாறு நேர்ந்ததை மறக்கலாமோ
கறையிலா வாழ்வு வாழ பிரிந்து நீ சென்றவேளை
கலங்குதே எம்மிதயம் கண்ணே நீ பிரிந்தவேளை
இன்று நீ இங்கிருந்தால் இதமுடன் எம்தன் வாழ்வு
நன்றுமே பொலிந்திருக்கும் என்றுமே நிறைந்திருக்கும்
எந்த இருள் தன்னிலும் வெளிச்சத்தை மறைக்கலாமோ
அந்நிலைதான் உன் நினைவும் எம்மனதில்.
இறையடி எய்திய எமதன்பு செல்விக்கு நிறைவுடன் செலுத்துவோம் நினைவஞ்சலி!

அப்பா, அம்மா, அண்ணா,
தங்கைமார், உறவினர்கள்.

கைதடி, நுணுவில்,
சாவகச்சேரி. (9162)

---

## இலங்கை வர்த்தகர் மலேசியாவில் தடுப்பு

கோலாலம்பூர், ஜன 17

இலங்கை வர்த்தகர் ஒருவர் மலேசிய அரசினால் தடுத்து வைக்கப்பட்டார்.

விசா முடிவடைந்த பின்னரும் மலேசியாவில் தங்கியிருந்ததற்காக கைது செய்யப்பட்ட இவரின் பெயர் பெர்னாட் டீ சில்வா.

விரைவில் அவர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## இறால் வளர்ப்போருக்கு கடன் வழங்கும் திட்டம்

கொழும்பு, ஜன 17

இறால் வளர்ப்பில் ஈடுபடுவோருக்கு கடனுதவித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த கடற்றொழில் அமைச்சு முன்வந்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

ஆகக்கூடியது இரண்டு லட்சம் ரூபாவரை இத்திட்டத்தின் கீழ் இறால் வளர்ப்போர் பெறமுடியும்,

மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி மூலம் இக் கடனுதவியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் 3 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பு உப்புத் தன்மை வாய்ந்தது. இறால் வளர்ப்பு அப்பகுதிகளில் இடம்பெறுகிறது.

இக் கடனுதவித் திட்டம் உடனடியாக அமுலுக்கு வருகிறது. (இ-எ)

### பனை மகா வித்தியாலயம்

பச்சிலைப்பள்ளி ஜன 17

அண்மையில் வெளியாகிய ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் பளை மகா வித்தியாலயத்தில் பரீட்சைக்கு தோற்றிய 45பேரில் 31பேர்பல்கலைக் கழகத்துக்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கத் தகுதியடைந்துள்ளனர்.

இவர்களில் இருவர் மருத்துவத்துறைக்கும் ஒருவர் உயிரியல்துறைக்கும் ஐந்து பேர் கலைத் துறைக்கும் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று அதிபர் அ. பொ. செல்லையா தெரிவித்தார். (ச-115)

### அலையரசி படகு சேவை

நெடுந்தீவு ஜன 17

அனலைதீவு ஊர்காவற்றுறைக்கான அரச மோட்டர் படகு அலையரசி தனது சேவையை மீண்டும் தொடக்கவுள்ளது.

துறைமுகங்களை விட்டு படகு புறப்படும் நேரங்கள் குறித்து அனலைதீவு மக்களின் கோரிக்கை சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டுவருகிறது.

காலை குறிகட்டுவானில் இருந்து புறப்பட்டு அனலைதீவு எழுவைதீவு ஊடாகபடகு ஊர்காவற்றுறைக்குச் சென்று பிற்பகலில் ஊர்காவற்றுறையில் இருந்து மீண்டும் குறிகாட்டுவானுக்குச் செல்ல நடவடிக்கை எடுக்குமாறு அனலைதீவு மக்கள் கோரியுள்ளனர்.

முன்னர் அலையரசி படகு காலை ஊர்காவற்றுறையில் இருந்து புறப்பட்டு பிற்பகலில் மீண்டும் ஊர்காவற்றுறை [illegible] (க-111)

---

மக்கள் முகம்

### அண்ணா சனசமூக நிலையம்

ஊர்காவற்றுறை ஜன 17

வட கரம்பொன் அண்ணா சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நிலையத் தலைவர் திரு. க. கனகரத்தினம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. க. கனகரத்தினம். உபதலைவர்: திரு. சு. இராசு; செயலாளர்: திரு. ம. யோசராசன், பொருளாளர்: திரு. வி இராசரத்தினம்.

நிர்வாக சபை உறுப்பினர்கள்:- திரு. மா. பாலசிங்கம், (கலை இலக்கியத்துறை) திரு. ந. மேவின் (விளையாட்டுத் துறை), திரு. ஐ. கனகசபைதிரு. ஆர். ஒ. பெர்ணண்டோ, திரு. இ. அன்பழகன், திரு. சி. சிவனேஸ்வரன், திரு. அ. எமில், (கணக்குப்பரிசோதகர்) (க-16)

### மனோன்மணி அம்பாள் ஆலயம்

யாழ்ப்பாணம், ஜன 17

சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் பொதுக் கூட்டம் 12 ஆம் திகதி திருமதி க. அன்னம்மா தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் புதிய அங்கத்தவர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

போஷகர்: திருமதி க. அன்னம்மா, தலைவர்: திரு. த. நவரத்தினம், உபதலைவர்: திரு. சி. பஞ்சாட்சரம், காரியதரிசி: திரு. சி. கந்தசாமி, உபகாரியதரிசி: திருமதி செ. இரத்தினேஸ்வரி, தனாதிகாரி: பொ. கனகரத்தினம், உறுப்பினர்கள்: திருமதி ச. மனோரஞ்சிதம், திரு. பி. நேசதுரை, திரு வ. சண்முகநாதமுதலி, செல்வன் க. சத்தியலிங்கம். (க)

### ஸ்கந்தா

யாழ்ப்பாணம் ஜன 17

1987 ஆகஸ்ட் ஜீ. சி ஈ. உயர்தரப் பரீட்சையில் ஸ்கந்த வரோதயக் கல்லூரியிலிருந்து தோற்றியமாணவர்களில்53சதவீதத்தினர்சித்தியடைந்துள்ளனர்.

45 சதவீதமானோர் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வர்த்தகத் துறையில் ஒருவர் இரண்டு ஏயும் இரண்டு பீயும் பெற்று யாழ் மாவட்டத்தில் 2ஆவது இடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

மேலும் இப் பரீட்சையில் இருமாணவர் ஏ, பி, இரு சியும் இருவர் ஏ, மூன்று சியும் ஒருவர் ஏ, பி, சி, எஸ்உம் ஒருவர் மூன்று பி, ஒரு சியும் பெற்றனர். (க)

## தேவைப்படின் படையினர் செயலில் இறங்குவர்

கொழும்பு, ஜன 17

ஆயுதப் படையினர் சில சந்தர்ப்பங்களில் தேவைப்பட்டால் செயலில் இறங்கவேண்டி ஏற்படலாம்.

-இப்படி கொழும்பில் அரசுப்பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

அவசரகால நிலை நீக்கப்பட்டதும் தென் பகுதியில் இருந்து ஆயுதப் படைகள் முகாம்களுக்குத் திரும்பலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. [ஓ-எ]

### கூட்டம்

பண்டத்தரிப்பு, ஜன. 17

வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தின் 30 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர் வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள 35 ஆம் இலக்க மண்டபத்தில் டாக்டர் அ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறும். (க-120)

---

### வீட்டு உதவி

நெடுந்தீவு, ஜன. 17

இந்தியாவில் அகதிகளாக இருந்து திரும்பியவர்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுப்பது தொடர்பான உதவிகளை யூனிசெவ் நிறுவனம் நெடுந்தீவில் மேற்கொள்ளலாம் எனத் தெரிகிறது. (க-111)

### ஒட்டுசுட்டானில் 'பரா' படையினர்

ஒட்டுசுட்டான், ஜன 17

இந்திய இராணுவத்தின் 'பரா' பிரிவைச் சேர்ந்தவர்கள் ஒட்டுசுட்டானில் முகாமிட்டுள்ளனர்.

கமதல சேவை நிலைய வளவுக்குள் கூடாரம் அமைத்து இவர்கள் முகாமிட்டுள்ளனர். [ஒ-113]

### அமுதசுரபியில் அன்னதானம்

வேலணை, ஜன 17

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனைத் தரிசிக்கவரும் யாத்திரிகர்கள் நலன் கருதி வெள்ளிக்கிழமைகளில் அமுதசுரபி அன்னதான மண்டபத்தில் அன்னதானம் வழங்கப்படுகிறது. (ச-167)

## வட்டு விளையாட்டுக் கழகம் வெற்றி ஈட்டியது

யாழ்ப்பாணம் ஜன 17

தைப்பொங்கல் தினத்தன்று அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட உழவர் விழாவில் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியில் அண்ணா விளையாட்டுக் கழகத்தைஎதிர்த்துவிளையாடிய வட்டு விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று வெற்றிக் கேடயத்தைத்தனதாக்கிக் கொண்டது,

மரதன் ஓட்டப்போட்டியிலும் வட்டு விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த க. பிரபாகரன் முதலாம் இடத்தைப் பெற்றார். (இ)

## சக்கர வண்டிகளைப் பெற்ற நால்வர்

யாழ்ப்பாணம், ஜன. 17

இயற்கையாக அங்கவீனமடைந்தவர்களுக்கு யாழ். மாவட்ட சமூக சேவைத் திணைக்களம் சக்கர வண்டிகளை வழங்கியது

கடந்த 11ஆம் திகதி யாழ். செயலகத்தில் இந்த வைபவம் நடைபெற்றது.

முதற்கட்டமாக யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த செல்வி கார்த்திகாயினி கனகலிங்கம், செல்வி ஆர். ஏ. கத்தரீன், திரு. சோமசுந்தரம் தங்கராசா, திரு. கருப்பையா மாரிமுத்து ஆகியோருக்கு மேற்படி சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

யாழ்-மாவட்டச் செயலக உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ் பி. பாலசிங்கம், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை நிர்வாகச் செயலாளர் திரு. எஸ். பாலசிங்கம், சமூகசேவைத் திணைக்கள அலுவலர் திரு அ. இராமநாதன் ஆகியோர் வைபவத்தில் கலந்து கொண்டனர். (இ-10)

---

தமிழ்ச் சங்கப் புலவர்களின்:

## இயற்கை பற்றிய அறிவு தமிழையும் மருத்துவத்தையும் மலர வைத்தது

### தமிழியல் அரங்கில் கலாநிதிபாலசுந்தரம்உரை

யாழ்ப்பாணம் ஜன 17

இந்தியாவில் ஆயுள் வேத வைத்தியம் வடக்கிலும் சித்தவைத்தியம் தமிழ்நாட்டிலும் வளர்ந்து வந்தன. தமிழரின் வரலாறு தனித்துவம் பாரம்பரியம் ஆகியன சித்த வைத்திய நூல்களில் காணப்படுகின்றன. தமிழ்ச்சங்கப் புலவர்கள் இயற்கைபற்றிய அறிவையும் மருத்துவத்தையும் நன்கறிந்திருந்தனர்.

யாழ் பல்கலைக் கழக தமிழியல் மன்றத்தினரால் நடத்தப்பட்ட தமிழியல் அரங்கில் 'தமிழ் இலக்கியமும் மருத்துவமும்' பற்றி உரையாற்றுகையில் யாழ் பல்கலைக் கழக தமிழ் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இ பாலசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்:

இவ் அரங்கிற்கு செல்விசி.சுகந்திதலைமை வகித்தார்.

கலாநிதி பாலசுந்தரம் தனது உரையில் மேலும் கூறியதாவது.

''கரு உற்பத்தி, மகப்பேற்று மருத்துவம் கருச்சிதைவு, கருச்சிதைவு செய்வோருக்கான தண்டனை பற்றியவிபரங்கள் புறநானூறிலும், திருமந்திரத்திலும் கூறப்பட்டுள்ளன.

சித்தவைத்தியத்தைச் சிவன் வைத்தியம் என்றும், சித்த வைத்தியத்தை முதலில் சிவன் சக்திக்குக் கூற அதனைக் கேட்ட நந்தி அகஸ்தியருக்குக் கூற பின் அகத்தியர் தனது சீடர்களுக்குக் கூறியதாகக் கூறப்படுகிறது. அகத்தியரின் பெயர் முதல் சங்க கடைச்சங்க நூல்களில் காணப்படுகின்றன.

தொல்காப்பியரின் மாணவர் அகத்தியர் ஆதலால் இவரின் காலத்தில் மருத்துவ நூல்கள் இருந்திருக்க வேண்டும். இவை இயற்கை கால வெள்ளத்தினால் அழிந்திருக்கக் கூடும் தமிழ் புலவர்கள் மருத்துவராகத் திகழ்ந்ததற்கு மருத்துவன் தாமோதரன் என்ற பெயர் சான்று பகருகிறது.

இடைச் சங்க கால நூலான இசை நுணுக்கம் என்ற நூல் தசவாயுக்கள் பற்றிய செய்திகளைக் கூறுகிறது. எனவே இடைச் சங்க காலத்தில் சிறந்த மருத்துவ நூல்கள் இருந்திருக்க வேண்டும்.

போர் பெரிதும் நடைபெற்றகாலத்தில் இரண சிகிச்சையின் முக்கியத்துவம் நன்கு உணரப்பட்டிருக்கிறது. பதிற்றுப் பத்தில் மருத்துவ ஊசியும் நூலும் கொண்டு வெட்டுக் காயங்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டதென்றும், அறுவைச் சிகிச்சை நடைபெற்றதென்றும் கூறப்பட்டுள்ளது. வெட்டுக்காயங்களில் தொற்று நோய்க் கிருமிகள் புகாவண்ணம் தடுப்பதற்கான வழிமுறைகள் கையாளப்பட்டதென்பதற்கு புறநானூறின் 281ஆம் பாடல் சான்று பகருகின்றது. அத்துடன் மன நோய், உடற்பிணி, நோய் வருவதற்கு முன்பு காத்தல், வந்தபின் காத்தல் ஆகியவற்றைப் பற்றி கலித்தொகையில் கூறப்படுகிறது.

சங்க இலக்கியத்தில் மனிதனுக்கு ஏற்படும் நரை, நீடிய வாழ்வுக்கான வழிவகைகள், நோன்புகள் பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியம் 98வகையான மூலிகைகளைப் பற்றிக் கூறுகின்றது. குறிஞ்சிப்பாட்டு ஒன்றே இதற்குப் போதுமான சாட்சியமாகும். காயகற்பம் என்ற மருந்து, நெல்லிக்கனி, சந்தனம், மிளகு, உள்ளி ஆகியவற்றின் சிறப்பியல்புகளைச் சங்க இலக்கியத்தில் காண்கிறோம்.

தமிழ்ப் புலவர்கள் இலக்கியத்தில் மட்டுமல்ல வைத்தியத்திலும் விற்பன்னராயிருந்தனர்; புலவர்கள் மத்தியில் சிறந்த வைத்தியனாய் விளங்கியவர் தாமோதரன் ஆவர்.

— இப்படி அவர் கூறினார். (ச)

### வயிற்றோட்டமும் காய்ச்சலும்

கோப்பாய், ஜன 17

சிறுபிள்ளைகளுக்கு வயிற்றோட்ட நோயும், மூன்று நாள் காய்ச்சலும் கோப்பாய் பகுதியில் பரவலாகக் காணப்படுகிறது. (சி-72)

---


**Uni Services Engineers**

மின்சாரத் தடையினால் தடைப்பட்டிருந்த வேலைகள் அனைத்தும் துரிதகதியில் மேற் கொள்ளப்படுகின்றன, மின்சாரம் தடைப்பட்டிருந்த வேளையிலும் அவசர வேலைகள் ஜெனரேட்டர் உதவியுடன் மேற் கொள்ளப்பட்டன.

உங்கள் குளிர்சாதனப் பெட்டிகள், குளிரூட்டிகள், மின்மோட்டர்கள், குக்கர்கள், மின் விசிறிகள், மிக்சர் மற்றும் சகலவிதமான வீட்டு மின்சார உபகரணங்களின் திருத்த வேலைகளை துரிதகதியில் நியாயமான கட்டணத்திலும், செய்து கொள்ளலாம்.

நம்பிக்கையும் நாணயமுமான சேவைக்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.

**யுனி சேர்விசஸ் இஞ்சினியேர்ஸ்**

(ஸ்ரேஷன் அருகாமை)
ஆஸ்பத்திரி வீதி,
19, ஆசீர்வாதம் லேன்,
யாழ்ப்பாணம்.

[8987]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வயிற்றோட்டம் சொறி-சிரங்கு தீவுப்பகுதியில் வேகமாகப் பரவுகின்றன

## ஊர்காவற்றுறைக் கருத்தரங்கில் உரை

அனலைதீவு, ஜன. 17

''தீவுப் பகுதிகளில் உள்ள சுகாதாரப் பிரச்சினைகளில் வயிற்றோட்டம், குடல் நோய்கள், சொறி, சிரங்கு, போஷாக்கின்மை, சுற்றுடல் சுகாதாரம், தாய் சேய்நலம் ஆகியவை முக்கியமானவை. இப்பகுதிகளில் உள்ள பொதுநிறுவனங்கள் பொதுமக்களை ஊக்குவித்து அவர்களின் ஒத்துழைப்போடு இவற்றைத் தீர்க்க முயல வேண்டும்.''

அண்மையில் ஊர்காவற்றுறையில் நடைபெற்ற சுகாதாரக் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்து உரையாற்றிய சுகாதார வைத்திய அதிகாரி ஜி. கந்தசாமி இவ்வாறு கூறினார்.

இக்கருத்தரங்கில் மேற்பார்வைச் சுகாதாரப் பரிசோதகர் திரு. ஏ. செல்லையா தமது உரையில் கூறியதாவது:

யாழ். மாவட்டத்தில் 50சத வீதமான நோய்கள் வயிற்றோட்டமும் குடல் வியாதிகளுமாகும். வயிற்றோட்டநோய் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் அதிகமாக உள்ளது.

இலங்கையில் வருடம் 6500பேர் வயிற்றோட்டத்தால் இறக்கிறார்கள். இதில் 3500பேர் 5 வயதுக்குட்பட்டோர்.

மனிதனின் கழிவுப் பொருள்தான் மனிதனின் முதல் எதிரி. இவை கைமூலமும் நீர் மூலமும் திரும்பவும் மனித உடலை அடைந்து குடல் நோய்களை உண்டாக்குகின்றன.

சுடவைத்து ஆறிய நீரைப் பருகுவதன் மூலமும் சுகாதாரப் பழக்க வழக்கங்களை மக்கள் மதியில் ஏற்படுத்துவதன் மூலமும் குடல் நோய்களை கட்டுப்படுத்தலாம்.

வயிற்றோட்டம் உள்ள குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டலாம். நீராகாரமும் கொடுக்கவேண்டும். சராசரி இலங்கையில் ஒரு குழந்தைக்கு இருமுறை வயிற்றோட்டம் ஏற்படுகின்றது. போஷாக்கில்லாத குழந்தைகள் அடிக்கடி வயிற்றோட்டத்தால் பாதிக்கப்படுகின்றனர். சத்துள்ள உணவை குழந்தைகளுக்கு ஊட்ட வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

புளியங்கூடல் அபிவிருத்திச் சங்கத்தைச்சேர்ந்த திரு. எஸ். நாகராசா பேசுகையில் கூறியதாவது:-

தொண்டர்களாகிய நாம் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள மக்களுக்கு சுகாதார விடயங்களை எடுத்துக்கூறி அவர்கள் தங்கள்பிரச்சினைகள் பற்றி சிந்திக்கத் தூண்ட வேண்டும்.

சுகாதாரக் கல்வியை அவர்களுக்கு அளிப்பதன் மூலம் மக்கள் தங்கள் சுகாதாரப் பிரச்சினைகளை இனங்கண்டு ஆவன செய்யவேண்டும். இப்படி அவர் கூறினார்.

யாழ். சுகாதாரக் கல்வி அதிகாரி திரு கே. வைத்தீஸ்வரன் பேசுகையில் கூறியதாவது:-

கிராமத்துக்குக் கிராமம் சுகாதாரப் பிரச்சினைகள் வேறுபடுகின்றன. அவற்றை அவ்வப் பகுதி பொதுநிறுவனங்கள் இனங்கண்டு பொது மக்களையும் சம்பந்தப்படுத்தி அவர்களின் ஒத்துழைப்புடன் அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும்.

சுகாதார ஊழியர் தனித்து பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

பொதுநிறுவனங்களின் ஒத்துழைப்பு அவசியமானது. போஷாக்கின்மையும் ஓர் முக்கியமான பிரச்சினை.

கோழி வளர்ப்பு, கறவைமாடு வளர்த்தல் வீட்டுத்தோட்டம் மூலமும் வருமானம் குறைந்தோர், குறைந்த செலவில் கூடிய சத்துள்ள உணவுப் பொருள்களைப் பெறலாம்.

ஒரு குடும்பத்தில் இரண்டு முட்டை அவித்தால் முதலில் தாய் ஒரு முட்டையைக் கணவனுக்கும் ஒரு முட்டையை ஆண் பிள்ளைக்கும் கொடுக்கிறாள். மற்றப் பிள்ளைகளுக்கும் தனக்கும் குறைந்த சத்துள்ள உணவையே பகிர்ந்து கொள்கிறாள். இதனால் தாய் இரத்தச் சோகைக்கும், குழந்தைகள் போஷாக்கின்மைக்கும் ஆளாகின்றனர்.

எனவே போஷாக்கின்மை பற்றி தாய்மார்களுக்கு அவர்கள் சிந்திக்கத்தக்க முறையில் அறிவுறுத்த வேண்டும்.

வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள மக்களின் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் பரிகாரம் காணவேண்டும் எனப் புதிய ஜனாதிபதியும் பணித்துள்ளார்.

இதற்கு பொதுநல நிறுவனங்கள் போதிய ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

இறுதியில் மலகூடங்கள் அமைத்து சுற்றுடல் சுகாதாரத்தை மேம்படுத்தல், சொறி சிரங்கு சிகிச்சை அளித்தல், போஷாக்கின்மைக் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல் போன்ற செயல்திட்டங்களை மாதாமாதம் ஒவ்வோர் கிராமங்களிலும் நடத்த உதவுதாக அரசு சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கூறினர். (க-18)

# சேவைகால முன்பயிற்சி பெறும் 18 பட்டதாரி ஆசிரியர்

யாழ்ப்பாணம், ஜன. 17

சேவைக்கால முன்பயிற்சி பெறவுள்ள 18 பட்டதாரி ஆசிரியர்களின் பெயர் விவரங்கள் யாழ் கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

(1) செல்வி என். செல்வமலர் குண்டசாலை, (2) செல்வி ரி. ரஞ்சிதமலர், பருத்தித்துறை (3) செல்வி என். செல்லத்துரை, மீசாலை (4) செல்வி எஸ். சாம்பசிவம் நல்லூர் (5) ஈ. கே. கைலவாசன், சுழிபுரம் (6) திருமதி சந்தியாப்பிள்ளை, மிருசுவில் (7) செல்வி மாலதி நடராசா புலோலி (8) எஸ், சற்குருநாதன். கொக்குவில் (9) ஏ. விக்னேஸ்வரன், சரவெட்டி (10) விஜயரத்தினம். ராஜேந்திரம் கொக்குவில்.

(11) செல்வி கே. சின்னத்துரை, கிளிநொச்சி (12) திரு. ஜி. மகிழ்ச்சிசரன், கந்தர்மடம் (13) செல்வி வி. வைத்திலிங்கம், பருத்தித்துறை (14) எம். கே. பி சர்மா, கொழும்பு-13 (15) ஏ. எம். ஏ. காதர் பந்துளு ஓயா (16) செல்வி எம். எஸ். எஸ். பரீனா, புத்தளம் (17) எம். ஐ. எம், கமால்தீன், புத்தளம் (18) திருமதி ஜீவராஜ் லோகேஸ்வரன் சிலாபம். (இ-10)

### தண்ணீர் பிரச்சினை

கோப்பாய் ஜன 17

கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு தண்ணீர் கிடைப்பது பெரும் சிரமமாகவுள்ளது.

வைத்தியசாலைக்கென நீரிறைக்கும் மோட்டார் வழங்கப்பட்டும் மின் இணைப்பு கிடைக்காததினால் இந்நிலை எனத் தெரியவருகிறது. (க-72)

### உடற்பயிற்சிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம். ஜன 17

சாவகச்சேரி கல்வி வட்டாரத்திற்குரிய உடற்பயிற்சிப் போட்டி சம்பந்தமான கருத்தரங்கு ஆரம்பமாகி உள்ளன.

விசேட புள்ளியிடும் முறை குறித்து இக் கருத்தரங்கில் விளக்கமளிக்கப்படும் என்று உடற்கல்வி கல்வியதிகாரி திரு. த. அருணகிரிராஜா தெரிவித்தார்.

17 ஆம் திகதி வடமராட்சி கோட்டத்திற்குரிய கருத்தரங்கு அல்வாய் சின்னத்தம்பி ம. வியிலும்-

காங்கேசன்துறை, மானிப்பாய், வட்டுக் கோட்டை பகுதிக்குரிய கருத்தரங்கு 18 ம் திகதி இராமநாதன் கல்லூரியிலும்-

நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் பகுதிக்குரிய கருத்தரங்கு 19 ம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியிலும்-

புங்குடுதீவு, வேலணை பகுதிக்குரிய கருத்தரங்கு 20 ம் திகதி ஸேர் வைத்திலிங்கம் துரைச்சாமி ம.வி லும் காலை 9மணிக்கு நடைபெறும். (உ)

# கழகங்களின் வளர்ச்சியிலே கிராம விருத்தி தங்கி உள்ளது

## வளர்மதி வெள்ளி விழாவில் உரை

கொக்குவில், ஜன 17

திட்டமிடல், ஒழுங்குபடுத்தல், செயற்படுத்தல் போன்ற விடயங்களை இது போன்ற சன சமூக நிலையங்கள், முன்னேற்றக் கழகங்கள் மூலம் கற்கிறீர்கள். இது போன்ற கழகங்களின் வளர்ச்சி மூலம் கிராமங்களின் வளர்ச்சியையும் உயர்த்த முடியும்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் சழகத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு நடைபெற்ற முத்தமிழ் விழாவின் மூன்றும் நாள் நிகழ்ச்சியில் இவர் உரையாற்றினார்.

வைபவத்தில் 'ஷப்ரு, உதயன்' நிர்வாக முகாமையாளர் திரு. ஈ. சரவணபவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வளர்மதி முன்னேற்றக் கழக வெள்ளி விழா வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று தினங்களிலும் நடைபெற்றது.

வளர்மதி முன்னேற்றக்கழகத்தின் போஷகரும் வெள்ளிவிழாக் குழுத் தலைவருமான திரு. சி. குகனேந்திரன் தலைமை வகித்தார்.

சிறப்பு விருந்தினர்களில் ஒருவரான நல்லூர் ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. பெ. கனகசபாபதி தமது உரையில் இன்று நடைபெறும் வெள்ளிவிழா நிகழ்ச்சி வெறுமனே கழகத்துக்கு மட்டும் வெள்ளிவிழா அல்ல. சுடின உழைப்புக்கு வெள்ளிவிழா, தன்னம்பிக்கைக்கு வெள்ளிவிழா என்று குறிப்பிட்டார்.

வரவேற்புரையை திரு. கு. சிவகுமார் நிகழ்த்த விழாக்குழுச் செயலாளர் திரு. சி. செ செல்வராசா நன்றியுரை கூறினார்.

வெற்றி பெற்றவர்களுக்கான கேடயங்கள், வெள்ளிக் கோப்பைகள் மற்றும் பரிசில்களை திருமதி சரவணபவன் வழங்கினார்.

எறிபந்தாட்டப்போட்டியில்முதலாமிடத்தைக் கொய்யாத் தோட்டம் விளையாட்டுக் கழகமும் இரண்டாமிடத்தை உரும்பராய் விளையாட்டுக்கழகமும் பெற்றுக் கொண்டன.

சிறந்த விளையாட்டு வீரராக கொய்யாத் தோட்ட விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. ஜெயகுமார் தெரிவு செய்யப்பட்டு பரிசில் வழங்கப்பட்டது.

சிறந்த துடுப்பாட்ட வீரராக திரு. செல்வாவும், சிறந்த பந்து வீச்சாளராக உரும்பராய் வி. க. வைச் சேர்ந்த பவானும் சிறந்த தடுப்பாளராக ஜெகசோதியும் தெரிவு செய்யப் பட்டார்கள்.

உதைபந்தாட்டப் போட்டியில் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது. இரண்டாமிடத்தை பொற்பதி விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்டது

சரம் போட்டியில், மேற்பிரிவில் க கல்பராஜ் முதலாமிடத்தையும், பே புவனேந்திரகுமார் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

கீழ்ப் பிரிவில் சி சிவரூபன், செ தணிகேஸ்வரன் ஆகியோர் முறையே முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்றுக் கொண்டனர்

இப்போட்டிகள் 'ஷப்ரு' யுனிக்கோ பினான்ஸ்லிமிட்டெட்டின் ஆதரவில் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-69)

### ஒதுக்கப்பட்ட நிதியின் ஒரு பகுதி மூலம்

# ஊர்காவற்றுறை மின்திட்டம்அபிவிருத்தி

ஊர்காவற்றுறை, ஜன 17

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் ஊர்காவற்றுறைப் பட்டணம், நாரந்தனை உப அலுவலகங்களின் மின்சார திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக முன்னர் ஒதுக்கப்பட்ட நிதியின் ஒரு பகுதி மீண்டும் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண அபிவிருத்திச்சபையின் உப அலுவலகங்களாக முன்னர் இருந்த இவ்விரு அலுவலகங்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

ஆனால் கடந்தகால அசம்பாவிதங்களினால் அபிவிருத்தி வேலைகளை நடைமுறைப்படுத்துவதில் பல தடைகளிருந்தன.

இதனால் இந்நிதி ஒதுக்கீட்டில் ஒருபகுதி யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் நிதியோடு தங்கியிருந்தது.

தற்போது மேற்படி மிகுதிப் பணம் ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு வழங்கப்படவுள்ளதாகவும் இதனால் பல மின் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் எனவும் கூறப்படுகிறது. (க-16)

### மிளகாய்த்தூளில் கலப்படம்

பண்டத்தரிப்பு, ஜன 17

கலப்படம் செய்யப்பட்ட மிளகாய்த்தூளைப் பண்டத்தரிப்பு,சங்கானை தெல்லிப்பழை,சுன்னாகம் ஆகிய பகுதிகளில் உள்ள கடைகளில் விற்ற இருவரை இப்பகுதிஇளைஞர்கள் தேடி வருகின்றனர்.

இத்தூளை வாங்கிப் பாவித்தவர்கள் தாம் சமைத்த கறிகளை வீச வேண்டி ஏற்பட்டதாம். [ε-J2(]

# பஜனையின் புனிதத்துவத்தை பேணுவது அவசியம்

யாழ்ப்பாணம், ஜன. 17

''எல்லாப் பக்தர்களும் பஜனையின் புனிதத்துவத்துக்கு ஏற்றவாறு உடை அணிந்து இருக்க வேண்டும். விசேஷமாக பெண்கள் பஜனை மண்டபத்திற்கு வரும் போது சேலை அணிந்து போர்த்தி இருக்க வேண்டும். சேலை அணியாதவர்கள் உடம்பை பூரணமாக மறைக்கும் ஆடை அணிய வேண்டும் என பிரசாந்தி நிலையம் விடுத்துள்ள கட்டுப்பாட்டைப் பூரணமாகப் பேண வேண்டும்''.

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்/ பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தி திருநெல்வேலியில் நடைபெற்ற பஜனையின் இறுதியில் சமித்தித் தலைவர் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில்;

''இரண்டு வருடங்களுக்கு மேல் இயங்கி வரும் பஜன நிலயங்களின் ஐந்து நிமிடநேர கூட்டுத் தியானம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் இக்கட்டளை கள் யாவும் நமது நாட்டுக்குச் சொல்லப்படவில்லை இது போன்ற 14 சட்டங்கள் பிரசாந்தி நிலயத்தில் இருந்து விடுக்கப்பட்டுள்ளது. அவையாவும் 'பஜனாவளி'' என்ற பஜனை புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ளதை நீங்கள் பார்க்கலாம்

என்று சொன்னார். சட்டங்களின் படி முழுமையான இரண்டு நிமிட கூட்டுத் தியானம் ஐந்து நிமிடமாக்கப்பட்டு அன்றைய பஜனையின் இறுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது (சி)

### மலசலகூடம் திருத்தம்

முல்லைத்தீவு, ஜன. 17

பல காலமாகக் கவனிப்பாரற்றுக் கிடந்த முல்லைத்தீவு பொதுச் சந்தைக் காணியில் அமைந்திருக்கும் மலசல கூடங்கள் திருத்தி அமைக்கப்படுகின்றன.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் விசேஷ ஆணையாளர் திரு. சி. க. சர்வானந்தன் இத் திருத்தப் பணிப்புரைகளை விடுத்திருக்கிறார். [இ-92]

# கற்றலுக்கான பின்னணியை உருவாக்குவதே பாலர் பாடசாலை ஆசிரியைகளின் பணி

## சேவைக்காலப் பயிற்சியில் மன்னார் கல்விப் பணிப்பாளர்உரை

மன்னார், ஜன 17

பாலர் கல்வி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வஞ்சகம், சூது ஏதுமற்ற பிஞ்சு மனங்கள் அஞ்சாமல் அரவணைப்பைநாடி ஓடிவரும் இடமாகப் பாலர் பாடசாலைகள் அமைதல்வேண்டும். பாலர்களை வழிநடத்தும் ஆசிரியைகளின்வேலை கற்பித்தலல்ல. மாறுகக் கற்றலுக்கேற்ற பின்னணியை உருவாக்கிக் கொடுத்தலே.

மன்னார் மாவட்ட சர்வோதய நிலையத்தின் ஆதரவில் நடத்தப்படும் பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான வதிவிட சேவைக்காலப் பயிற்சி நெறியின் இறுதிநாளன்று சிறப்புரை ஆற்றிய மன்னார்ப் பிரதேசக் கல்விப்பணிப்பாளர் ஜனாப். எம்.ஏ.சி முகைதீன்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:

குழந்தைகள் இயல்பாகவே விளையாட்டில் ஊக்கமுள்ளவர்கள்.

அதை ஒரு ஊடகமாகப்பயன்படுத்தி நாம் கற்பிக்க நினைக்கும் சகல விடயங்களினதும் எண்ணக் கருக்களைப் பிள்ளைகள் பெறக் கூடிய முறையில் பின்னணியை அதாவது வசதி வாய்ப்புக்களைச் செய்துகொடுத்தல் வேண்டும்,

களிமண், மணல், நீர் போன்றவற்றைக் கை ஆள்வதன் மூலமும், சுயாதீனமாகப்படங்களை வரைந்து தங்களது கற்பனாசக்தியை வளம் படுத்துவதன் மூலமும், மொழி, கவிதை, அழகியல், ஆக்க எண்ணக் கருத்துக்களை அவர்கள் அறிந்து கொள்ள வழி காட்டவேண்டிய திறன்களை ஆசிரியைகள் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்

''பிள்ளை கேட்பதை மறந்து விடுகின்றான். பார்ப்பதை நினைவில் வைத்திருக்கின்றான். செய்வதைப் புரிந்து கொள்கிறான்'' என்ற கோட்பாட்டை மனதிற் கொண்டு செயல் மூலம் உணர்தலுக்கான செயல் திட்டங்களை வழங்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

சர்வோதய நிலயத்தின் இணைப்பதிகாரி திரு. வி. நடராஜா பேசுகையில், ''பாலர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து சர்வோதய நிலயத்தின மன்னார் மாவட்ட நிலயம் பல வசதியீனங்கள் சிரமங்கள் மத்தியிலும் இந்த வதிவிட சேவைக்கால பயிற்சி வகுப்புகளை ஒழுங்கு செய்தது.

''இதை நடத்திய விரிவுரையாளரின் திறமையினால் இப்பயிற்சி நெறி சிறப்பாக அமைந்தது.

'சாதாரணமாக அரசாங்க பாடப்புத்தகத்தில் அமைந்த பாடலைகளைக் கற்பிக்கும் போக்கை மாற்றிடிய பாலர் பாடசாலைப் பயிற்றுவிக்கவேண்டும்'' என்றார். (ச)

# கட்டட மேற்பார்வையாளர் பயிலுனருக்கு மேலும் 12பேர் தெரிவாவர்

தேசிய தொழில் பயிற்சிச் சபையினரால் நடத்தப்பட்டு வரும் கட்டட மேற்பார்வையாளர் பயிலுனர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறியில் 25 பயிலுனர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

ஏற்கனவே 13 பயிலுனர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள்.

பயிலுனர் பயிற்சிக்கு சேர விரும்புவோர் விஞ்ஞான பாடத்திலும், கணிதபாடத்திலும் திறமைச் சித்திகளை பெற்றிருக்கவேண்டும் பெப்ரவரி மாதம் இத்தப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படும் என்றும் பயிற்சி பற்றிய மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் யாழ் - தொழில் நுட்பக் கல்லூரி உப அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப் பட்டுள்ளனர்.

இப்பயிற்சி நெறியின் போது எட்டுக்கிழமைகளுக்கு 600 ரூபாவும் வெளிக்கள பயிற்சியின் போது நான்கு கிழமைகளுக்கு 300 ரூபாவும், மீண்டும் நான்கு கிழமைகளுக்கு நிறுவனத்தில் பயிற்சி வழங்கும்போது 300 ரூபாவும் கொடுப்பனவாக வழங்கப்பட வுள்ளன. (இ-10)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ் மாவட்டத்தில் உள்ள 7 வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் பாடசாலை மாணவர்களின் சுகாதாரப் பராமரிப்பு பற்றிய கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

இதன் ஆரம்பக்கட்டமாக யாழ் இந்து மகளிர் கல்லூரியில் யாழ் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு கே. கந்தசாமி தலைமையில் முதலாவது கருத்தரங்கு நடைபெற்றது.

யாழ் பிராந்தியக் கல்விப்பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகமும் யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் கே. கனகசபையும் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

மற்றும் பல வைத்திய அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (இ-5)

# அறிவித்தல்

## முல்லைத்தீவு மாவட்டத்தில் கடும்பாதிப்புற்றோருக்கான நிவாரணம் வழங்கல்

1983 ம் ஆண்டு யூலை மாதம் 24ம் திகதியில் இருந்து ஏற்பட்ட இனக்கலவரங்கள், வன்செயல்கள், பாதுகாப்பு நடவடிக்கைகள், தொடர்ந்த உள்நாட்டுப் பதட்ட நிலை ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புக்கள், ஊனங்களுக்கான நிவாரணம் வழங்கும் வேலைகள் இச் செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்நிவாரணத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் அவ்வப் பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் பணிமனையில் கீழ்க்கண்ட திகதிகளில் வழங்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் வழங்குவதற்கான தகைமை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒருங்கிணைந்த புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ''குடும்பப் பதிவு அட்டையின்'' பிரகாரம் நிர்ணயிக்கப்படும்.

விண்ணப்பங்கள் இணைப்பிரதியில் பூர்த்தி செய்யப்பட்டு கீழ்க்கண்ட திகதிக்கு முன்பு பகுதி கிராம சேவை உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்படல் வேண்டும். இது சம்பந்தமான மேலதிக விபரங்களைத் தங்கள் பகுதி உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலோ அல்லது கிராம சேவை உத்தியோகத்தரிடமிருந்தோ பெற்றுக் கொள்ளலாம்.

| உதவி அரசாங்க அதிபர் பிரிவு. | உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும் திகதிகள். | விண்ணப்பப்பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கிராம சேவை உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட வேண்டிய திகதி |
|---|---|---|
| 1. மாந்தை கிழக்கு (பாண்டியன்குளம்) | 23-01-89 முதல் 27-01-89 வரை | 1989.02.15 ஆம் திகதிக்கு முன்பு |
| 2. துணுக்காய் | 30-01-89 முதல் 03-02-89 வரை | 1989-02-22 ஆம் திகதிக்கு முன்பு |
| 3. புதுக்குடியிருப்பு | 13-02-89 முதல் 17-02-89 வரை | 1989 03-08 ஆம் திகதிக்கு முன்பு |
| 4. கரைதுறைப்பற்று (முல்லைத்தீவு) | 27-02-89 முதல் 03-03-89 வரை | 1989-03 22 ஆம் திகதிக்கு முன்பு |

க. பொன்னம்பலம்,
முல்லைத்தீவு அரசாங்க அதிபர்.

கச்சேரி, முல்லைத்தீவு,
08-01-1989

(C/1304)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்

## ஆண்டு 6 முதல் 8 வரை வகுப்புநடத்த அனுமதி

யாழ்ப்பாணம், ஜன 17 அண்மைக் காலச் சம்பவங்களினால் இராணுமுகாமாகச் செயற்பட்டு வந்த புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் ஆண்டு 6 முதல் 8 வரை வகுப்புக்களை நடத்த அமைதிப்படை அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த 15 மாதங்களாக இப் பாடசாலையின் மாணவர்கள் வேறுபாடசாலைகளிலும் மர நிழல்களிலும் பாடங்களைக் கற்று வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது ஆண்டு 6 முதல் 8 வரை வகுப்புக்களை நடத்த அனுமதிக்கப்பட்டபோதும் அருகே உள்ள விளையாட்டு மைதானம் தொடர்ந்தும் அமைதிப்படையினரின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். (இ-126)

## பிறந்ததின வாழ்த்து

### ✶ செல்வன் பா. கௌரிபாலன் ✶

வேலணை மேற்கு பாலசுப்பிரமணியம் விஜயலட்சுமி தம்பதிகளின் ஏகபுதலவன் திருவளர் செல்வன் கௌரிபாலன் இன்று (17- 01- 1989) தனது 2ஆவது பிறந்தநாளை யாழ்ப்பாணம் அரசடி வீதியிலுள்ள தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். அவரை பல்கலைச் செல்வங்களுடன் முடிப் பிள்ளையார் அருளுடனும், நல்லைக்கந்தனின் கருணையோடும் நீடூழி வாழ வாழ்த்துபவர்கள் அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பிரான்ஸ் பெரியப்பா மற்றும் உறவினர்கள், நண்பர்கள்,

(8699)

## ரெருசோ ஷிப்ஸ்

## (TERRAZZO CHIPS)

- ★ வெள்ளை சீமெந்து
- ★ கலர் பவுடர் (PIGMENTS)
- ★ பித்தளை, அலுமினியம் பட்டி, தரை வெட்டும் மெசின்

ரூபா 12/ க்கு மேல்

### றம்சன்ஸ்

443, Old Moor St. Colombo - 12

தொலைபேசி:- 31511—34411

## 'M' Three Travel

பெருமையுடன் வழங்கும்

### உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

சவுதி அரேபியா:-

(1) கணக்காளர் [Accountant] - 900 SR

(2) பொறியியலாளர் [Civil Engineer] - 1500 SR

(3) பொறியியல் மேற்பார்வையாளர் [Civil Forman] - 800 SR

(4) கம்பி கட்டுபவர் [Steel Fixer] - 700 SR

(5) மேசன் [Mason] - 700 SR [35 Vacancies]

(6) தச்சுத் தொழிலாளர்கள் [Carpenters] - 700 SR [4 Vacancies]

(7) வாடகைக்கார் சாரதிகள் [Taxi Drivers] - 800 SR

(8) கனரக வாகன சாரதிகள் [H. V. Drivers] - 1100 SR (சவுதி வாகன அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் மட்டும்)

(9) சப்பல்தள வேலையாட்கள் [Deckmen] - 550 SR (நீச்சல் தெரிந்தவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும்)

(10) பராமரிப்பு தொழிலாளர் [Maintenance Cleaners] (25 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஆங்கில அறிவுடன்)

(11) Cleaner - 50 Vacancies

✶ கடவுச்சீட்டு BOND செய்து கொடுக்கப்படும்.

✶ எங்களிடம் புதுக்கடவுச்சீட்டு செய்பவர்கள், எங்கள் மூலம் வேலை வாய்ப்புப்பெற்றுச் செல்ல விரும்பினால் உடனடியாக விசா (VISA) செய்து கொடுக்கப்படும்.

✶ நம்பிக்கை

✶ நாணயம்


என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

### 'M' THREE TRAVEL

இவை எல்லாவற்றிற்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

'இந்திரபவனம்' 1, 2ம் ஒழுங்கை,
சோதி லேன், மின்சார நிலைய வீதி,
கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
காங்கேசன்துறை. (C/1334)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திகை அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

### கந்தையா மார்க்கண்டு

(இளைப்பாறிய அதிபர்)

மலர்வு: 26 - 09 - 1920 உதிர்வு: 18 - 12 - 1988

அன்பின் சிகரமாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், உற்றார்க்கும் கற்றார்க்கும் ஊழியனாய், எங்கள் குடும்ப ஒளி விளக்காய், அன்புமொழி பேசி எம்மை எல்லாம் நல்வழிப்படுத்திய அன்புத் தெய்வமே! உங்கள் திருமுகத்தை இனியாம் எங்கே காண்போம், கண்ணீர்க் கடலில் தத்தளிக்கின்றோம். உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல கற்பக விநாயகனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுமாகிய உற்றார், உறவினர்கள, நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள். 17 - 01 - 89 இல் எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்

'ஆனந்த பதி' மனைவி, மக்கள்,
கோப்பாய் தெற்கு, மருமக்கள்,
கோப்பாய். பேரப்பிள்ளைகள்.

(8980)

## ★ தரமான கலர்ப்படப் பிரதிகள் ★

அதிகுறைந்த கட்டணத்தில்

மிகக் குறுகிய காலத்தில்



### கலர்ப்படச் சுருள் கழுவுதல் முற்றிலும் இலவசம்

நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்தல் 3 முதல் 5 நாட்களில் விநியோகம்

ஷப்ருவை நாடுங்கள்

### ஷ ப் ரு

207, மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்: 22073

அன்னை அடிக்கமலத் தண்ணா
உன் ஆன்மா
அமைதி பெற வேண்டுவமே!

அருள்மிகு
நாக இராஜ இராஜேஸ்வரி அம்பாள்
பரிபாலன சபை, கருகம்பனை.

நீ தொட்ட பணிகளெலாம்
நெடிது வளர்வது கண்டு
அமைதியொடு அபிராமி
அடிக்கீழ் வாழ்ந்திடுவை.


கிராம அபிவிருத்திச் சங்கம்,
கருகம்பனை.

அன்பிற்கோர் அண்ணா அன்னை அடிக்கமலத்து
அணைந்தமைதிகண்டனையே! சாந்தி அடைந்திடுக

இராஜ இராஜேஸ்வரி
ஐக்கிய நாணய சங்கம்,
கருகம்பனை.

(C/1333)

### அம்பாள் அடிக்கமலத் தமரர் அண்ணா



அம்பிகையின் அரவணைப்பில்
அண்ணா நீ வாழ்ந்திடுக.

சுற்றமுஞ் சூழலும்
கருகம்பனை.

மலர்வு: 02 - 02 - 1959 உதிர்வு: 03 - 12 - 1988

அன்பு, அடக்கம், அரவணைப்பு, ஆதரவு
என்றினைய ஏங்க அன்னை திருவடிக்கு
நன்று என்றும் பூசைசெய நண்ணினையோ!
சாந்தி அடைந்திடுக.

இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம்.
கருகம்பனை.

அல்லும் பகலும் அண்ணா உன் அருள்
முகத்தை
என்றும் மறவோம் யாம்! எற்றமுறு சாந்தி
இயைந்திட நாம் வேண்டுகின்றோம்.

தமிழ் மன்றம்,
சனசமூக நிலையம்,
கருகம்பனை.

நிர்மல,

நும் உழைப்பால் வளர்ந்தோம், எம்
உயர்வு நும் ஆத்ம சாந்திக்கு
வழி செய்வதாக!

ஆரம்ப சுகாதார நிலையம்.
கீரிமலை, கருகம்பனை, மயிலங்கூடல்.

## கட்டட ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

மன்னார் பிரதேச

### கல்வித் திணைக்களம்

மன்னார் பிரதேச கல்வித் திணைக்களப் பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலைகளின் கட்டடங்களை நிருமாணிப்பதற்காக ஒப்பந்தம் செய்வதற்கென பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து இத் திணைக்களத்தில் பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

2. ஒப்பந்தக்காரர்கள் முன்னர் செய்த வேலைகள் சம்பந்தப்பட்ட ஒப்பந்த அத்தாட்சிப்பத்திரத்துடன் பதிவுத் தபால் மூலம் 1989 தை மாதம் 31ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "மன்னார் பிரதேச கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், மன்னார்" என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பதிவுத் தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் "ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்

3. பதிவு செய்வதற்கான கட்டணம் ரூபா 100/- ஆகும். இப்பணம் காசோலை, காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளை மூலம் மன்னார் பிரதேச கல்விப் பணிப்பாளருக்கு செலுத்தக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்தே வழமையாக ஏற்றுக்கொள்ளப்படும் எனினும் இதற்கு மாறாக சில சந்தர்ப்பங்களில் வேறு ஸ்தாபனங்களிடமிருந்தும் தேவையேற்படும்போது கேள்விப் பத்திரங்களை அவர்களுக்கு வழங்கும் உரிமையை மன்னார் கல்வித் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவர் உரிமை பெற்றுள்ளார், என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எம். ஏ. சி. முகைதீன்,
பிரதேச கல்விப் பணிப்பாளர்,
மன்னார்.

பிரதேச கல்வித் திணைக்களம்,
மன்னார்.
1989-01-18 (C/1335)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவுமோர் நோய்.

**பொருள்:**

தனக்கு நன்மையானவற்றைப் பிறர் ஏவினாலும் செய்யாதவனும், தானாகவும் உணர்ந்து தெளியாதவனாய் உள்ளவனுடைய உயிர் போகுமளவும் ஒரு நோயாகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல. 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 23073
17. 1. 1989 த. பெ. இல 23


## குளங்கள் புனரமைப்பு

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள 144 சிறிய குளங்கள் இந்த ஆண்டில் புனரமைக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது. அவற்றின் புனரமைப்பு வேலைகளுக்கு, அமெரிக்க உதவித் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

தமிழ்ப் பகுதிகளின் விவசாய வளர்ச்சியில் அக்கறை உடைய சகலருக்கும், தமிழ் விவசாயிகளுக்கும் இது ஒரு நற்செய்தியாகும்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் மொத்தமுள்ள எட்டு மாவட்டங்களில் பலவற்றில் பெரிய ஆறு, நதி என்று சொல்வதற்குத் தானும் ஒன்றுமில்லை. குளங்கள் என்று சொல்வதற்கும் பெரிதாக இருப்பவை ஒரு சிலவே.

ஆறுகள், பெரிய குளங்களை மையமாக வைத்துத் தான் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவது உண்டு. நீர்ப்பாசனத் திட்டங்கள் இருந்தால் மட்டுமே விவசாயத் திட்டங்களை உருவாக்க முடியும்.

தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்தமட்டில், கிழக்கில் உள்ள இரண்டொரு பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், விவசாயத் திட்டங்களைத் தவிர வேறு இல்லை.

மழையும், சிறுகுளங்களுமே தமிழ்ப் பகுதிகளின் விவசாயத்திற்கான பிரதான நீர் வழங்கும் மூலங்களாக உள்ளன.

வருடத்தில் ஒரு சில மாதங்களே மழை பெய்யும். அப்போது, கடலில் போய்ச் சேரும் மழை நீரைத் தடுத்துச் சிறிய குளங்களில் தேக்கி, அந்தந்தப் பகுதிகளில் சிறிய அளவிலான விவசாயச் செய்கைகளை மேற்கொள்வதே தமிழ்ப் பகுதிகளில் நடைமுறையில் உள்ளது. கிணற்று நீரை நம்பி மிகச் சிறிய அளவில் விவசாயச் செய்கை மேற்கொள்வோர் எண்ணிக்கையே தமிழ்ப் பகுதிகளில் அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் பின்னணியை இயற்கையின் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை, நோக்குமிடத்து சிறிய குளங்களை அண்டி விவசாயச் செய்கையை விருத்தி அடையச் செய்ய வேண்டியதன் தேவையை நன்கு உணர முடியும்.

ஆகையால் சீரழிந்து போயிருக்கும் சிறிய குளங்களைப் புனரமைப்புச் செய்வது தமிழ்ப் பகுதியின் விவசாயத்துறை வளர்ச்சிக்கு மிக அவசியமாகும். தமிழ்ப் பகுதி விவசாயத்தின் முதுகெலும்பு சிறிய குளங்கள் என்று கூறினும் மிகையாகாது.

1983 ஆம் ஆண்டின் பின்னர் வடக்கு, கிழக்கில் எந்த அபிவிருத்தி வேலையுமே சரிவர நடக்கவில்லை. வன்செயல்களைக் காரணம் காட்டித் தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் திரும்பப் பெறப்பட்டன. வெளிநாட்டு உதவிகள் கூடப் பாதுகாப்புச் செலவுக்குள் ஊட்டப்பட்டன. நடைபெற்று வந்த அபிவிருத்தி வேலைகள் — சிறிய குளங்களைப் புனரமைத்தல் உட்பட — இடைநிறுத்தப்பட்டன.

இப்போதாவது தமிழ்ப் பகுதிகளில் சிறிய குளங்களைப் புனரமைப்பதற்கு அரசு முடிவு செய்திருப்பது வரவேற்கத்தக்கது. அது வெறும் செய்தியாக, — காகிதத்திட்டமாக இல்லாமல் செயல் வடிவம் பெற வேண்டும். அதில் தாமதமோ, தடங்கலோ ஆகாது என்பதை தமிழ் விவசாயிகள் சார்பில் வலியுறுத்துகிறோம்.

வரண்ட பிரதேசங்களில் மேலும் பல புதிய சிறிய குளங்களைத் தோண்டுவதிலும் நாட்டம் காட்ட வேண்டும்.

நிலத்தடி நீரைப் பெறுவதற்கான விஸ்தாரமான திட்டங்களும் தேவை ஆனால் அவை உரிய முறையில், நீர்வளத் தரவுகளை அடிப்படையாக வைத்து உகந்த தொழில் நுட்ப உத்திகளைக் கையாண்டு தயாரிக்கப்படுவதும், செயற்படுத்தப்படுவதும், மிக முக்கியமாகும்.

## வானொலி வர்ணனையாளராக மாறஇருக்கும் அதிபர் றேகன்!

அதிபர் றேகன் பதவியில் இருந்து விலகிய பின்னர் பழைய வேலை அவரை எதிர்பார்த்துக் காத்து இருக்கிறது.

வருகிற வெள்ளியன்று றேகன் பதவி விலகினார்.

மீண்டும் றேகனை வானொலிவர்ணனையாளராக வருப்படி இரண்டு ஒலிபரப்பு நிலையங்கள் கேட்டு உள்ளன.

வாரத்தில் ஐந்து தினங்கள், தினமும் ஒரு மணித்தியாலம் விளையாட்டு வர்ணனை நிகழ்த்தினால் ஆண்டுக்கு ஒரு லட்சம் டாலர் தருவதாக லொஸ் ஏஞ்சல்ஸ் வானொலி நிலையம் அறிவித்திருக்கிறது.

ஆனால் இன்னொரு நிலையம், ஆண்டுக்கு 2 லட்சம் டாலர் பணம் தருவதாக ஆசை காட்டி இருக்கிறது.

# சுதந்திரம் கோரி செக். மக்கள் பேரணி. நாய்களை ஏவி பொலிஸார் தடியடி!

பிராக், ஜன. 16

20 ஆண்டுகளுக்கு முன்னர் செக்கோஸ்லேவேகியாவில் அப்போதைய தலைவர் அலெக்ஸாண்டர் டப்செக் ஜனநாயகச் சீர்திருத்தத்தை மேற்கொண்டார்.

அதை நசுக்க சோவியத் துருப்புக்கள் பிராக் நகரினுள் பிரவேசித்தன.

அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக பாலக் என்ற இளைஞர் தனக்குத்தானே பெட்ரோலை ஊற்றி தீயிட்டுத் தற்கொலை செய்து கொண்டான். பிராக் நகரின் முக்கிய சதுக்கத்தில் இச் சம்பவம் நடைபெற்றது.

அந்தத் தினத்தை அனுஷ்டிக்குமுகமாக நேற்று ஆயிரக்கணக்கான செக் மக்கள் அரசின் தடையுத்தரவையும் மீறித் திரண்டனர்.

செக் பொலிஸார் கூட்டத்தைக் கலைக்க கண்ணீர்க்குண்டுப் பிரயோகம், தடியடி நடத்தினர்; நாய்களையும் கூட்டத்தினர் மீது ஏவிவிட்டனர்.

மக்கள் 'எமக்கு சுதந்திரம் வேண்டும்' என்று கோஷமிட்டனர்.

பொலிஸார் நாய்களை ஏவி துரத்தும்போதும் தேசிய கீதத்தை இசைத்த வண்ணம் கலைந்து சென்றனர். (எ)

## அடிக்கடி மாறும் ஆப்கன் நிலைமை

காபூல், ஜன 16

ஆப்கனிஸ்தானில் எஞ்சியுள்ள ஐம்பதனாயிரம் சோவியத் துருப்புக்களும் திட்டமிட்டபடி அடுத்தமாதம் 15 ஆம் திகதிக்குள் விலக்கிக் கொள்ளப்பட்டு விடும் என்று அறிவிக்கப்படுகிறது.

ஆப்கனில் உள்ள சோவியத்துருப்புக்களின் பிரதம தளபதி இந்த உறுதி மொழியை அளித்திருக்கிறார்.

இதனிடையில் சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவார்ட்னட்ஸே காபூலுக்கு திடீர் விஜயம் செய்து அதிபர் டாக்டர் நஜிபுல்லாவுடன் பேச்சுக்களை நடத்தினார்.

அப்போது ஆப்கன் கெரில்லாக்களுக்கு அவர் எச்சரிக்கை ஒன்றை விடுத்தார்.

சோவியத் துருப்புக்கள் விலக்கப்பட்ட பின்னரும் கெரில்லாக்கள் யுத்தத்தைத் தொடர்ந்தால், ஆப்கன் அரசுக்கு சோவியத் யூனியன் தொடர்ந்து ஆயுதங்களை வழங்கி வரும்— இதுவே சோவியத் அமைச்சர் விடுத்த எச்சரிக்கை.

அதேவேளை — சோவியத் அரசுடன் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும்படி ஈரான் தலைவர் அலி கொமேனி, ஆப்கன் கெரில்லாக்களைக் கேட்டுள்ளார். (எ)

## முன்னாள் பிரதமர் கடத்தப்பட்டார்

பிரஸ்ஸல்ஸ், ஜன 16

பெல்ஜியத்தின் முன்னாள் பிரதமர் அன்டஹாரிசன் காணாமற் போய்விட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

அவர் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாமென்று சந்தேகிக்கப்படுகிறது

கடந்த சனிக்கிழமை காலையிலிருந்து இவரைக் காணவில்லையாம். (எ)

## நகோர்னு-கரபா பிரதேசம் மாஸ்கோவின் நேரடி நிர்வாகத்தில்

மாஸ்கோ, ஜன. 16

சோவியத் யூனியனில் இரண்டு மாநிலங்களுக்கு இடையே இன மோதலை உருவாக்கி வந்த நகோர்னு - கரபா பிரதேசம் மாஸ்கோவின் நேரடி ஆட்சியின் கீழ் நேற்று முதல் கொண்டு வரப்பட்டது.

இப்பிரதேச நிர்வாகத்தைக் கவனிக்க தெரிவு செய்யப்பட்டபிராந்திய நாடாளுமன்றமும் கிரெம்ளின் அரசினால் கலைக்கப்பட்டது.

புதிய நிர்வாகக் குழு ஒன்றை மத்திய அரசு நியமித்துள்ளது. அந்தக் குழு மத்திய அரசின் ஆணைக்குக் கீழ் செயல்படும்.

இந்த நடைமுறை அப்பகுதியின் பிராந்திய நாடாளுமன்றத்தின் புதிய தேர்தல் நடத்தப்படும் வரை நீடிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நகோர்னு - கரபா பிரதேசம் 1923 ஆம் ஆண்டு முதல் அஸர்பைஜான் மாநில அரசின் கீழ் நேற்று வரை இருந்து வந்தது.

அஸர்பைஜான் மாநிலத்தில் பெரும்பான்மையோர் முஸ்லிம்கள். நகோர்னு - கரபா பிரதேசத்தில் வசிப்பவர்களில் 75 சதவீதமானோர் ஆர்மேனியர்கள்; 25 சதவீதமானோர் மட்டுமே இஸ்லாமியர்கள்.

அஸர்பைஜான் மாநில அரசு பாரபட்சமாக நடத்துவதாகக் கூறி நகோர்னு-கரபா பிராந்திய நாடாளுமன்றம் ஆர்மேனிய மாநிலத்துடன் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கடந்த பெப்ரவரியில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

அதைத் தொடர்ந்து இரண்டு மாநிலங்களுக்கும் இடையே இடம் பெற்று வந்த மோதலில் 85 பேர் வரை உயிரிழந்தனர்.

கடந்த வாரம் பிரச்சினையைப் பேசித் தீர்ப்பதற்காக இரண்டு மாநிலங்களின் தலைவர்களையும் மாஸ்கோவுக்கு வரும்படி கிரெம்ளின் தலைவர்கள் அழைத்து இருந்தனர். அதன்படி மாஸ்கோவில் பேச்சுக்கள் நடந்தன.

அதைத் தொடர்ந்தே நகோர்னு - கரபா பகுதியை மத்திய ஆட்சியின் கீழ் கொண்டு வரும் உத்தரவை மாஸ்கோ அரசு பிறப்பித்துள்ளது. (எ)

## இரசாயன ஆயுதம் பாவிப்பு இல்லை! 149நாடுகள் பிரதிக்ஞை

பாரிஸ் ஜன 16

இனிமேல ரசாயன ஆயுதங்களைப் பாவிப்பதில்லை என்று 149 நாடுகள் பிரதிக்ஞை எடுத்துள்ளன.

பாரிஸில் இதுசம்பந்தமான சர்வதேச மாநாட்டில் பிரதிக்ஞை உடன்பாட்டில் 149 நாடுகளின் பிரதிநிதிகளும் கையெழுத்திட்டன,

இரசாயன ஆயுத நுட்பத்தில் வளர்ச்சியடைவது, தயாரிப்பது, சேர்த்து வைப்பது மற்றும் உற்பத்தியாகிய ஆயுதங்களை அழிப்பது ஆகியன சம்பந்தமாக ஐ நா சாசனம் ஒன்றை உருவாக்குவது எனவும் பாரிஸ் மாநாடு தீர்மானித்தது.

அச்சாசனம் கைச்சாத்தானவுடன் இரசாயன ஆயுத அழிப்பை சோவியத் அரசு ஆரம்பிக்கும் என மாநாட்டின் முடிவில் சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவார்நாட்ஸே அறிவித்தார். (எ)

### இணக்கம்

பாரிஸ் ஜன 16

மரபு வழி ஆயுதங்களைக் குறைப்பது சம்பந்தமான பேச்சுக்களைமீண்டும்ஆரம்பிக்க நேட்டோ மற்றும் வார்சோ அமைப்புக்கள் இணக்கம் கண்டுள்ளன. (எ)

# உள்ளத்திலே வலி;கண்ணீரில் மிதக்கிறது இரு விழி! தி.மு.க மேடையில் ஏறுதது பற்றி ராஜேந்தர் வர்ணனை

சென்னை ஜன 16

தி. மு க. விலிருந்து என்னை ஒதுக்கித் தள்ளுகிறார்கள் நான் தேர்தல பிரசாரம் செய்ய மாட்டேன்'' என்று டைரக்டரும். நடிகருமான டி. ராஜேந்தர் கூறினார்.

நடிகரும், டைரக்டருமான டி. ராஜேந்தர் தி.மு. க. வில் இருந்து வருகிறார். கடந்த தேர்தல்களில் தி. மு. கழகத்துக்காக தமிழ் நாடுமுழுவதும் தேர்தல் பிரசாரம் செய்தார். தேர்தலில்தி மு. க. வுக்கும்அவருக்கும் இடையே சில கருதது வேறுபாடு ஏற்பட்டதால் அவர் தேர்தல் பிரசாரத்துக்கு செல்லவில்லை.

தி மு. கழக தலைவர் கருணாநிதி டி.. ராஜேந்தரை அழைத்துப் பேசினார்,

அதன் பிறகு அவர் பிரசாரத்துக்குசெல்வார் என எதிர்பார்க்கப் பட்டது.

இதற்கிடையில், டி. ராஜேந்தர் அரசியலில் தனது எதிர்கால நடவடிக்கை குறித்து ஆராய தனது ரசிகர் மன்ற நிர்வாகிகளின் அவசர கூட்டத்தைக்கூட்டினார்.

கூட்டம் முடிந்ததும் டி. ராஜேந்தர் தேர்தல் பிரசாரததுக்கு நான் செல்ல வில்லை'' என்று கூறினார்.

இது பற்றி அவர் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில் அவர் கூறி இருப்பதாவது.

இப்போது எம். ஜி. ஆர். இல்லை, தமிழ் நாட்டில் ஆளும் கட்சியும் இல்லை அ. தி. மு க, நான்காக உடைந்து கிடக்கிறது. இப்போது காணும் காட்சிகளும் வேறு. மேடையில் பேசும் பேச்சுக்களும் வேறு.



ராஜேந்தர்

தி. மு. கழகத்தைப் பொறுத்தவரை என் நிலையோ வேறு நான் காயப்பட்டிருக்கிறேன். கட்சியிலே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறேன். ஓரம் கட்டப்பட்டிருக்கிறேன் உதாசீனப்படுத்தப்பட்டு இருக்கிறேன். ஏன் எப்படி என்றெல்லாம் விளக்கம் தர முடியாத நிலையிலும் இருக்கிறேன்.

ஒரு சோதனையான கட்டம் என் தன்மானத்தைக் தட்டிஎழுப்பும் ஒரு அவமானக்கட்டம்.

மொத்தத்திலே இன்று நானும் என் மன்றத்தினரும் எட்டி உதைக்கப்பட்ட ஏணி. தொலைவில் எறியப்பட்ட தோணி, தள்ளி வைக்கப்பட்ட தனிமரம். வெந்துமணம் கொடுத்தாலும் மற்றவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்ட கருவேப்பிலை. தூண்டிலால் காயப்படுத்தப்பட்ட மீனின் நிலை தான் என் நிலையும்.

மைதிலிஎன்னைக் காதலி என்ற படத்தில் ஒரு பாடலை எழுதி இருந்தேன் அந்தப் பாடலின் வரி என் தற்போதைய நிலைக்குப் பொருந்தும்.

'தண்ணீரிலே மீன் அழுதால் கண்ணீரைத்தான யார் அறிவார் தனிமையிலே நான் அழுதால் என்மனதை யாரறிவார் முள்மீது விழுந்தபடி முகாரி பாடும் கிளி' இது தான் அன்று எழுதிய பாடலின் வரி.

### கோழை அல்ல

அதைப்போல் எனக்கு உள்ளத்தில் வலி கண்ணீரில் மிதக்கிறது இருவிழி காலம்தான் காட்ட வேண்டும் எனக்கொரு வழி.

நான் கலங்குவதற்காக மற்றவர்கள்கலங்க வேண்டும் என்று எதிர் பார்ப்பவன் நான் அல்ல. மேலே சொன்னதுபோல ... என்ப தற்காக கோழை அல்ல ஏழையாய் பிறந்தவன் தான் கோழையாக வாழ்ந்தவன் அல்ல நான் அவமானங்களைத் தாங்கிக் கொண்டவன்.

ஆனால் எந்தக் கால கட்டங்களிலும் தன்மானத்தை விற்றவன் அல்ல.

அப்படி அடிபட்ட போதெல்லாம் அழுகதுண்டு. ஆனால் அழிந்ததில்லை. கண்ணீர் வடித்ததுண்டு ஆனால் காணாமல் போனதில்லை. காயம் பட்டதுண்டு ஆனால் மாயமாக மறைந்ததில்லை. அடுத்து வளர்வோமா என்று தளர்ந்ததே இல்லை. கடவுள் நம்பிக்கை இருக்கிறது என்று துணிந்ததுண்டு.

### தமிழ்நாடு தேர்தல்களம்

தன்னம்பிக்கை இருக்கிறது என்று புதிய வேகத்தில்எழுந்ததுண்டு என் கடந்த காலத்தின் காலடிச் சுவடுகள் என் காயத்தைப் பார்த்துக் காற்று வீசிக் கொண்டு இருக்கிறது. காலம்பதில் சொல்லும் என்று பாட்டிசைத்துக் கொண்டிருக்கிறது

இவ்வாறு டி. ராஜேந்தர் கூறி உள்ளார்.

(எ-4)

# இராணுவச் சதி நடக்காது; பிரதமர் பெனாஸிர் நம்பிக்கை

இஸ்லாமபாத், ஜன 16

எனது ஆட்சியைக் கவிழ்க்க இராணுவப் புரட்சி ஏற்படாது.

பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ மேற்கண்டவாறு பி. பி. சி.க்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்,

அதிபர் ஸியா- உல்-ஹக் விமான விபத்தில் இறந்த பின்னர், ஆட்சியை நடத்தும் படி சில சக்திகள்இராணுவத்தை வற்புறுத்தினர். அவர்கள் தேச பக்தியுடன் நடந்து கொண்டனர்.

அதிபர் ஸியாவின் சர்வாதிகார ஆட்சி காரணமாக நாடு பிளவு பட்டது என அவர்கள் எண்ணினர்.

மீண்டும் இராணுவ ஆட்சி பாகிஸ்தானில் ஏற்படாது

இப்போது தேர்தல் நடத்தப்பட்டால் கூட எனது கட்சி அதிக பெரும்பான்மையுடன் மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும்.

இப்படிப் பிரதமர் பெனாஸிர் சொன்னார். (எ)

## தாய்லாந்தில் மரம் வெட்டத் தடை

பாங்கொக், ஜன, 16

மரங்களை வெட்டுவதற்கு தாய்லாந்து மன்னர் தடைவிதித்தார்.

மரங்களை வெட்டிப் போடுவதால் மழை நீர் தடுக்கப்பட்டு, வெள்ளம் ஏற்படுகிறது.

இதைத் தடுக்கவே இத் தடை விதிக்கப்பட்டுள்ளது: (எ)

## இஸ்ரவேலின் விமானத் தாக்குதல்

ஜெருசலம், ஜன.16

தென் லெபனானில் உள்ள அபுநிதால் பிரிவு பலஸ்தீன முகாம் மீது இஸ்ரவேல் நேற்று விமானத் தாக்குதல் ஒன்றை நடத்தியது. தாக்குதலில் ஈடுபட்ட விமானங்கள் சேதம் இன்றித் திரும்பியதாக டெல் அவிவ் அரசு அறிவித்தது.

இஸ்ரவேலுடன் சமாதானத்துக்கு வருவதை பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அபுநிதால் பிரிவு எதிர்க்கிறது. (எ)

# 1989 இல் உலகில் என்ன நடக்கும்?

ஜீன்டிக்ஸன், உலகின் பிரபல பெண் சோதிடர்.

1989 இல் உலகில் இடம்பெறவுள்ள முக்கிய நிகழ்ச்சிகளை இவர் முன்கூட்டியே தெரிவித்திருக்கிறார்.

அவற்றில் சில இங்கே தரப்படுகின்றன.

★ சார்ள்ஸ் இளவரசரும் டயானா இளவரசியும் தொடர்ந்தும் தங்கள் கருத்துவேற்றுமைகளை மறைக்க முயற்சித்து வருவர். ஆனால் உண்மையாக யாரேனும் அவர்களை இணைத்து வைக்க முயற்சிப்பின் மூன்றாவது குழந்தைக்கு அவர்கள் பெற்றோர் ஆகமுடியும்.

★ றேகனின் முத்திரை அவரின் ஆட்சி முடிந்த பின்னரும் அமெரிக்காவில் இருக்கும். சிறிய நோய் ஒன்றினால் அவர் பிடிக்கப்படுவார். அதனை அவர் கடைசிக்காலத்தில் மறைக்க முயற்சிப்பார்.

★ அரசியலில் ஆபாசம் கலப்பது உலகில் அதிகரிக்கும்.

★ 21 ஆம் நூற்றாண்டின் அரம்பத்தில் பேர்லின் சுவர் விற்கப்படும் ஒவ்வொரு கல்லாக, சுவரில் இருந்து எடுக்கப்பட்டு விற்கப்படும். மக்கள் நினைவுச்சின்னமாக அக்கற்களை வாங்கிச் செல்வர்.

★ ஐ நா. சபை மற்றும் வாஷிங்டனில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களில் பெரிய உளவு மோசடிச் சம்பவங்கள் அம்பலமாகும்.

★ பரிசுத்த பாப்பரசரின் உயிருக்கு தீவிரவாதிகளினால் ஆபத்து ஏற்படும். இயற்கை அழிவுகளைப் பார்க்கச் செல்லும் போது பாப்பரசர் தனது பாதுகாப்பை மும்மடங்கு பலப்படுத்த வேண்டும்.

★ மே 19- 23 காலத்தில் சர்வதேச உளவு மோசடி அம்பலப்படுத்தப்படும். உளவாளிகளின் முகமூடி கிழிக்கப்படும்.

★ வருகிற ஏப்ரல் முதல்வாரத்தில் பிரமாண்டமான பூமியதிர்ச்சி உலகைக் கலக்கும்.

★ இளவேனிற்கால நடுப்பகுதியில் கொரியா கொந்தளிக்கும் பகுதியாக உலகில் இருக்கும்.

அமெரிக்கத் துருப்புக்கள் உஷார்நிலையில் வைக்கப்படும்:

இரண்டு கொரியாக்களையும் இணைப்பதற்கான யுத்தம் இரண்டு ஆண்டுகள்வரை நீடிக்கும்.

★ சோவியத் தலைவர் மிக்கெயில் கோர்பச்சேவ் தனது அரசு, ஆயுதபடைகளில் இருந்து எதிர்ப்பை எதிர்நோக்குவார். இறுதியில் கோர்பச்சேவ் வெல்வார்.

★ ஜோர்ஜ் புஷ் மீது உலகம் அதிக நம்பிக்கை வைக்கும். இளவேனிற் காலத்தில் ஜனாதிபதி புஷ் சர்வதேச நெருக்கடி ஒன்றுக்குத் தீர்வு காணுவார்.

★ ஜனநாயகக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள அமெரிக்க காங்கிரஸுக்கும் அதிபர் புஷ்ஷுக்கும் இடையே நிலவும் 'தேனிலவு' கோடை காலத்தில் முடிந்து நெருக்கடி ஆரம்பிக்கும்.

★ எகிப்து அரசு ஆட்டம் காணும். மத்திய கிழக்கில் சர்வதேச வல்லரசுகள் மோதல் ஒன்றுக்கு அது வழிவகுக்கும்.

★ 'மாயக்கண்ணாடி' உலகில் தயாரிக்கப்படும் அதற்கு விசேட உணர்வு (Seusers)கள் இருக்கும். அவை தோல் வியாதியை சரியாக இனங்காணும்.

★ வருகிற பெப்ரவரி கடைசி வாரத்தில் இருந்து ஏப்ரல் முடிவுக்குள் மூன்று பெரிய விமான விபத்துக்கள் இடம் பெறும். கப்பல் விபத்து ஒன்றும் இளவேனிற் காலததில் இடம் பெறும்.

★ கம்பியூட்டர் மணிக்கூடுகள் வீடுகளில் இருக்கும். இவை, சாப்பிடும் நேரம், அலுவல்கள் பற்றி எல்லாம் வீட்டில் உள்ளவருக்கு அந்தந்த நேரங்களில் நினைவூட்டும்,

★ கென்னடி குடும்பத்தில் மீண்டும அன்புக்குரிய ஒருவர் மறைவார்.

★ ஜாக்குலின் கென்னடிக்கு மீண்டும் எல்லோரும் அதிசயப்படும்படி செல்வம் சேரும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



✶ ஜோன்சன்

வெளியிணை இயந்திரங்கள்
உதிரிப்பாகங்கள்
வலை, நூல், போயா
ரேலர் மடி நூல் வகைகளை
பெற்றுக்கொள்ள

**சென். அன்ரனீஸ்.**
63, யூதாததேயு வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.



# உதயன்

17-01-1989 செவ்வாய்க்கிழமை



கடற்பகுதி கடற்றொழிலாளர் கவனத்திற்கு!
எம்மிடம்

**ஜோண்சன் JOHNSON**

வெளியிணை இயந்திரங்கள்
உதிரிப்பாகங்களுடன்
ரேலர் மடி நூல் மீல்லி மீற்றர் வலை,
நூல், போயா போன்ற கடற்றொழில்
உபகரணங்களையும் மலிவு விலையில
வாங்கலாம்.

**சென். அன்ரனீஸ்**
40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.


அசம்பாவிதத்தில் உயிரிழந்த

## ஆஸ்பத்திரி ஊழியரின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு

### நேற்று வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன 17

யாழ் ஆஸ்பத்திரியில் 1987 அக்டோபர் அசம்பாவிதத்தின் போது மரணமடைந்த ஊழியர்களின் குடும்பங்களுக்குநேற்று நஷ்டஈடு வழங்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன் இந்த நஷ்டஈட்டுத் தொகைகளுக்கான காசோலைகளை வழங்கினார்.

யாழ் போதனா வைத்தியசாலை விரிவுரையாளர் மண்டபத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் 18 பேருக்கு காசோலைகள் வழங்கப்பட்டன.

இறந்த ஊழியர்களின் குடும்பங்களுக்கு 75 ஆயிரத்தில் இருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவரை நஷ்டஈட்டுத் தொகை வழங்கப்பட்டது. (உ-10)

## மார்ச் முதலாம் திகதி முதல் ஆசிரிய இடமாற்றங்கள்

யாழ்ப்பாணம், ஜன 17

இந்த வருட ஆசிரியர் இடமாற்றங்கள் மார்ச் மாதம் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் எனத் தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 11 ஆம் திகதி இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பிரமுகர்கள் கல்விச் சேவைகள் குழுவின் செயலாளர் திரு. எம். எச். எச். ஆரியரத்னவைச் சந்தித்த போது இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

வெளிமாவட்டங்களில் நாலுவருட சேவையைப் பூர்த்திசெய்தவர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு மாற்றப்படுவர்.

மூன்றுவருடசேவையை முடித்தவர்கள் யாழ், மட்டக்களப்பு தவிர்ந்த பிற மாவட்டங்களுக்கு விண்ணப்பித்திருப்பின் அந்த இடங்களுக்கு இடமாற்றப்படுவர்.

யாழ் அல்லது மட்டக்களப்பு மாவட்டத்திற்கென தெரிவு செய்யப்பட்டு பின்னர் மூன்று வருட கஷ்டப்பிரதேச சேவைக்காக வேறு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டவர்கள் அச்சேவை முடிந்ததும் மீண்டும் இவர்கள் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

**புதிய அரச அதிபர்**

திருகோணமலை, ஜன 17

திருகோணமலையின் புதிய அரசாங்க அதிபராக ஜனாப் ஏ. எம். எம். செய்யுருதீன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பொங்கல் தினத்தன்று அவர் தனது கடமையைப் பொறுப்பேற்றார். (உ-150)

## அமைச்சுகளைக் குறைக்க பிரேமாவுக்கு ஆலோசனை

கொழும்பு, ஜன 17

அமைச்சுக்களின் தொகையைக் குறைக்க வேண்டும் என்று ஜனாதிபதி நியமித்தமூன்றுபேர் கமிட்டி ஏற்றுக்கொண்டுள்ளது.

நிர்வாகச் சீர் திருத்தங்கள் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட வனசிங்கா கமிட்டி அமைச்சுக்களை குறைக்க வேண்டும் என்று சிபார்சு செய்திருந்தது

அதை ஜனாதிபதிபிரேமதாசா நியமித்த 3 பேர் கமிட்டியும் ஏற்றுக் கொண்டுள்ளது

அதற்கிணங்க, இனிமேல் அமைச்சுக்களின் எண்ணிக்கை 16 இல் இருந்து 20 வரை இருக்கும் எனத் தெரிகிறது.

கடந்தஆண்டில் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் கீழ் திட்ட அமைச்சுக்களையும் சேர்த்து மொத்தமாக 43 அமைச்சுக்கள் இயங்கின.

★ சுகாதார அமைச்சும், போதனா ஆஸ்பத்திரிகள் அமைச்சும் ஒன்றுக்கப்படவேண்டும்.

★ சமூகசேவை அமைச்சும் தொழில் அமைச்சும் ஒன்றுக்கப்பட வேண்டும்.

★ கலாசார அமைச்சு கல்வி அமைச்சுடனும்,

★ கிராம அபிவிருத்தி அமைச்சு, கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுடனும் இணைக்கப்படவேண்டும்.

—மூன்று பேர்கொண்ட கமிட்டி இப்படி ஜனாதிபதி பிரேமதாசாவுக்குத் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது. (உ-எ)

## ஜனாதிபதி தேர்தல் முறைகேடு குறித்து தேர்தல் கூட்டங்களில் பேசமுடியாத நிலை!

கொழும்பு ஜன 17

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போது இடம்பெற்றதாகக்கூறப்படும் முறைகேடுகள் குறித்து பொதுத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பேச முடியாத நிலை சகல அரசியல் கட்சிகளுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதித் தேர்தல் முடிவை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கே இதற்குக் காரணமாகும்.

நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும் போது அது தொடர்பாக மேடைகளில் பேசுவது, பத்திரிகைகளில் எழுதுவது நீதிமன்றத்தை அவமதித்த குற்றமாகக் கருதப்படும்.

ஆகவே எவரும் ஜனாதிபதித்தேர்தல் நடவடிக்கைகள் பற்றி பொதுத் தேர்தல் கூட்டங்களில் பேச முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. (உ-எ)

## திருகோணமலையில் கட்டடங்கள் சுவீகரிப்பு

திருகோணமலை, ஜன. 17

திருமலை அரசாங்கஅதிபரின் வாசஸ்தலம் உட்பட திருகோணமலையில் உள்ள பல கட்டடங்களை வடக்கு, கிழக்கு மாகாணசபை பொறுப்பேற்றுவருகிறது.

உவர்மலையில் உள்ள, இலங்கைத் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான இரு விடுதிகள், நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான விடுதி உவர்மலையிலுள்ள பெரிய ஹோட்டலான 'வெல்கம் ஹோட்டல்', திருகோணமலை முன்னாள் மாவட்ட அமைச்சரின் வாசஸ்தலம், உள்துறைமுகவீதியில் உள்ள சிங்கள மகாவித்தியாலயக் கட்டடம் ஆகியவையே தற்போது பொறுப்பேற்கப்பட்டிருக்கின்றன;

மேலும் பல அரசாங்கக் கட்டடங்களைப் பொறுப்பேற்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

திருமலை அரச அதிபரின்வாசஸ்தலம்மாகாணசபை முதலமைச்சரின் வாசஸ்தலமாகவும்—

'வெல்கம் ஹோட்டல்' கட்டடத்தில் மாகாணசபை உறுப்பினர்களின் தங்குமிட விடுதியாகவும் மாற்றப்படுமெனத் தெரியவருகிறது. (உ-150)

**ஆசிரியர்களுக்கான**

## சேவை முன் பயிற்சி நான்கு பாடசாலைகளில்

யாழ்ப்பாணம், ஜன. 17

கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கும், கலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்குமான சேவைக்கால முன்பயிற்சி சென் ஜோன்ஸ் கல்லூரி, சென் பற்றிக்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சனகரத்தினம் மகாவித்தியாலயம் ஆகிய நான்கு நிலையங்களில் நடத்தப்படும்.

கல்வி அதிகாரிகள், கொத்தணி அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நேற்று யாழ் பிராந்தியக் கல்விப்பணிப்பாளரினால் கூட்டப்பட்டது.

அக்கூட்டத்தில் பேசும் போது பணிப்பாளர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

இந்தவருடத்திற்கான இலவச பாடநூல் விநியோகத்தில் மேலதிக நூல்களைப் பெற்ற பாடசாலைகளும், போதியளவு நூல்கள் கிடைக்காத பாடசாலைகளும் தத்தமது பகுதிக்கொத்தணி அதிபர்கள்மூலம் அது பற்றி அறிவிக்கவேண்டும் என்றும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ஓ-5)

### நிர்வாகம்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்

கூட்டத்திற்கு மாகாண ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனவிரத்தின தலைமை வகித்தார்.

முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாளும் இதர அமைச்சர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இனக்கலவரத்தால் சீர்குலைந்துள்ள ஒழுங்கு முறையையும் சிவில் நிர்வாகத்தையும் மீண்டும் கொண்டுவர அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தேவநாயகம் தெரிவித்தார். (உ-எ)

## உலக வங்கி பிரதிநிதிகள் முல்லைத்தீவுக்கு விஜயம்

ஒட்டுசுட்டான், ஜன 17

உலக வங்கி பிரதிநிதிகள் குழு ஒன்று புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் சகிதம் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அண்மையில் விஜயம் செய்து அங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகளை மதிப்பீடு செய்தது.

அபிவிருத்தித்திட்ட செயற்பாடுகள் குறித்து பிரதிநிதிகள் குழு பின்னர் திருப்தி தெரிவித்தது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் அதிகாரிகளுடன் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். (உ-ச-113)

### வெளிநாட்டு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புனரமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இவற்றுக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி ஒன்றரைக் கோடி ரூபா வரை கொடுத்துதவ உறுதி அளித்திருக்கிறது.

அமெரிக்க உதவித் திட்டத்தின் கீழ் சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்குப் பத்துலட்சம் ரூபா நன்கொடையாகக் கிடைக்கும்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலயம் மூலம் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான வாகனங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் போன்றவை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாய நடவடிக்கைகளுக்கு யாழ் மாவட்டத்துக்குத் தேவையான வாகனங்கள் மற்றும் விவசாய உபகரணங்களை வழங்குவது குறித்தும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலயம் ஏற்கனவே ஆராய்ந்து வருகிறது.

இந்தத் திட்டங்கள் சகலதும் குறித்து கொழும்பில் நடக்கும் மாநாட்டில் இறுதி முடிவு எடுக்கப்படும். பிரஸ்தாப மாநாட்டில் யாழ்மாவட்டத்தின் உயர் அதிகாரி ஒருவரும் கலந்து கொள்ளவிருக்கிறார். (அ-ஐ)

கொழும்புத்துறையைச் சேர்ந்த

## 335 மீனவ குடும்பங்கள் ரூ. 4000 நிவாரணம் பெறத் தகுதி

யாழ்ப்பாணம் ஜன 17

யாழ். மாவட்ட நிவாரண உதவித் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்த 335 மீனவக் குடும்பங்கள் நாலாயிரம் ரூபா நிவாரண உதவி பெறவிருக்கின்றனர்.

இவர்களுக்கான கொடுப்பனவுகள் இவ்வாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கொழும்புத்துறைகிராம சேவை அலுவலர் திரு. ஏ. டொமினிக் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். (ஓ)

### நிவாரணம்

மாங்குளம், ஜன 17

மாங்குளம் மக்கள் வங்கியிலிருந்து 11 ஆம் திகதி விநாயகபுரம், வவுனிக்குளம், பாண்டியன் குளம் கிராம சேவகர் பிரிவில் உள்ள 500 பேருக்கு கடந்த 11 ஆம் திகதி நிவாரணப் பணம் வழங்கப்பட்டது. (க-44)

### பத்மநாதன் நியமனம்

திருகோணமலை, ஜன 17

வடக்கு, கிழக்கு மாகாணசபை புனர்வாழ்வு அமைச்சரின் செயலாளராகத் திரு. என். பத்மநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு. பத்மநாதன் மட்டக்களப்பு சிறை உடைப்புச் சம்பவம் தொடர்பாக 1984 டிசம்பரில் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்தார்.

பின்னர் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையடுத்து விடுதலையானார். (உ-150)

### வெளிஇட....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும் நீக்கும்படி எமது சங்கமே முதலில் வேண்டுகோள் விடுத்தது.

அண்மையில் கல்விச் சேவைகள் அமைச்சின் செயலாளர் திரு. எம். எச். எச். ஆரியரத்னவைச் சந்தித்து உரையாடியபோது மேற்படி சலுகையை வடபகுதியில் நிரந்தரமாக வசிப்பவர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் — திரு. மகாசிவம் தெரிவித்தார். (ஓ-5)

### அன்பளிப்பு

இந்திராபுரம் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தின் கூரை வேலைக்கான ரூபா ஏழாயிரம் பெறுமதியான கூரைத் தகடுகளை ஹொர்டெக்ஸ் நிறுவன பணிப்பாளர் எஸ். நாகராசா இந்திராபுரம் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் இ. கனகசபையிடம் கையளித்தார். [க-117]

### ஓரே பெயரில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள்.

★ திருவல்லிக்கேணியில் 2 'பன்னீர்செல்வம்' கள்.

★ மைலாப்பூரில் இரண்டு 'பாலன்' கள்.

★ மதுராந்தகத் தொகுதியில் சி. ஆறுமுகம் என்ற பெயரில் மூவர்.

★ பெரம்பூரில் வ். என். சுப்பிரமணியம் என்ற பெயரில் மூவர். (உ-எ)

## மரண அறிவித்தல்

### திரு. நாகலிங்கம் சின்னப்பு

கோப்பாய் வடக்கு நாகலிங்கம் சின்னப்பு காலமாகி விட்டார்;

இவர்பாக்கியத்தின் அன்புக் கணவரும்திரு. ஹென்றி (சிறுப்பர், துறைமுக சரக்கு கூட்டுத்தாபனம், கொழும்பு), திரு. செபரட்ணம் (ஓய்வு பெற்ற கோப்பிறல் இலங்கை இராணுவம்), திருமதி பிலோமினா யோசேப்பு, திருமதி பேர்ணடேற் இராசேந்திரம், திருமதி ஞானம்மா திலகராசா (ஆசிரியை B.A / யா ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத்தந்தையும், திரு. யோண் யோசேப்பு (ஓய்வுபெற்ற C.ID, பொலிஸ் இன்ஸ்பெக்டர்), திரு பேணுட் இராசேந்திரம் (பொறியியலாளர், சவுதி அரேபியா), திரு பா. திலகராசா (ஆசிரியர் நாவலர் வித்தியாலயம். கோப்பாய்), திருமதி திரேசம்மாஹென்றி, திருமதி கிறிஸ்ரி செபரத்தினம் ஆகியோரின் அன்பு மாமனாரும். ஹெடங்ஸ்ரன் (புனித பெனடிக் கல்லூரி கொழும்பு), ஹெஷெறின் நல்லாயன் (கன்னியர் மடம், கொழும்பு), செ. றாபவசந்தினி, செ. லிடியா, செ. ஜஸ்ரின், செ. டனிஸ்ரன் செ. மோறலின் [கோ. கிறிஸ்தவக் கல்லூரி] திருமதி தெரசினா ஜோர்ஜ் வின்ஸ்லோ [ஆங்கிலஆசிரியை, கோப்பாய்கிறிஸ்தவக் கல்லூரி] திரு ஜோர்ஜ் வின்ஸ்லோ [கனடியன் வங்கி], அஞ்சலோ யோசேப் [T A லீலா என்ஜினியரிங் வேக்ஸ், கொழும்பு], கிறிஸ்ரி யோசப் [காப்புறுதி அலுவலர் விப்ரன்ஸ், கொழும்பு], யோ. அஞ்சலீனா [யா/ வேம்படி மகளிர் கல்லூரி], இ. ஜோய் டிலிப்[ யா/ புனித பத்திரிசியார் கல்லூரி], தி. கிங்ஸ்ரன், தி. அனிஸ்ரன், தி அனிஸ்ரினா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 17-1-89 இன்று செவ்வாய்க் கிழமை பி.ப. 2. 30 மணியளவில் வட கோப்பாய் ஆர். க. சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்;

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
பாக்கியம் - சின்னப்பு.

இராச வீதி,
கோப்பாய்வடக்கு. (8994)

## மரணஅறிவித்தல்கள்

### திரு. J. K. இராஜேந்திரம்

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் சங்கு வலியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு யோசேப் கதிரவேலு இராஜேந்திரம் 16-1-89 திங்கள் காலமாகிவிட்டார். இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வீரகத்தி கதிரவேலு (ஆசிரியர்), பாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும் இராஜ லர், இராஜமோகன் (கனடா) இராஜமன்னன் (ஜேர்மனி), இராஜசேகரன் (கனடா), இராஜசிறி ஆகியோரின் அன்புத் தந்தையும் M சிவலோகநாதன் (முன்னைநாள் மதிப்பீட்டு பரிசோதகர் கொழும்பு மாநகரசபை). ரதி (கனடா), புவனேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் கபிலன், கஜெந்தன், கஜெந்தினி, சர்மினி, கோகிலன், காயத்திரி ஆகியோரின் அன்புப் பேரனும், இரத்தினம், அமிர்தரத்தினம், ஞானப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நமசிவாயம் பொன்னையா, செல்லம்மா ஆகியோரின் சிரேஷ்ட மருமகனும், பூபாலசிங்கம் (அதிபர், இடைக்காடு மகாவித்தியாலயம்) திருபாலசிங்கம், மங்கயர்க்கரசி, சத்திவடிவேல், கமலம். தேவி, தியாகராஜா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 16-1-89 அன்று நடைபெற்றது இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
M, சிவலோகநாதன்

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய். (8993)

### திருமதி மேரி மாகிறேற் யோசேப்பு

திருமதி மேரி மாகிறேற் யோசேப்பு (செல்லம்மா) 16-01-1989 இல காலமானார் அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை யோசேப்புவின் அன்பு மனைவியும், இம்மானுவேல் இராசரட்ணம் (இளைப்பாறிய சிறுகைத்தொழில் ஆசிரியர்), மேரி மெக்டலின் [பூமணி], பனகராஸ் செல்வரட்ணம் (இளைப்பாறிய கலால் பகுதி உத்தியோகஸ்தர்), லில்லி அக்கினேஸ் (இளைப்பாறிய ஆசிரியை யோண் பொஸ்கோ வித்தியாலயம்), ஆன் இராஜேஸ் [நவம்], காலஞ்சென்ற பிரான்சிஸ், சேவியர் நவரட்ணம் (முன்னாள் லேடன் இன்டஸ்றீஸ்), அலோசியஸ் அரியரட்ணம் (லேடன் இன்டஸ்றீஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற யோசேப்பு, காலஞ்சென்ற பிரான்சிஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி சற்குணம் இம்மானுவேல் (இளைப்பாறிய தையல் ஆசிரியை), திரு. அன்ரனி மரியதாஸ் (முன்னாள் சிலோன் தியேட்டேஸ் உத்தியோகஸ்தர்), திருமதி லீலா பன்கிறஸ், திரு செல்வரட்ணம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்). திரு. அ. மரியாம்பிள்ளை (சட்டத்தரணி), திருமதி கமலா சேவியர், திருமதி பிலோமினா அலோசியஸ் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்,

அன்னாரின் பூதவுடல் 17-01-1989 இன்று (செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4மணிக்கு அன்னாரின் இல்லம் 54, கோயில் வீதி யாழ்ப்பாணத்தில் இருந்து யாழ் பேராலய சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்;

தகவல்·
பன்கிறஸ்

(8990)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 17-01-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Tuesday 17th January 1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org